உ

# திருமுருகாற்றுப்படை

[உரையாசிரியருரையுடன்]

சென்னை ஸர்வகலாசாலைத் தமிழாராய்ச்சித்துறைத்தலைவர்

ராவ்ஸாஹிப் S. வையாபுரிப்பிள்ளையால்

பரிசோதிக்கப்பெற்றது

ACL-FTS
00HRH

செந்தமிழ்ப்பிரசுரம்—சூஅ

மதுரைத்தமிழ்ச்சங்கமுத்திராசாலை

மதுரை

1943

—

இதன் விலை அணா—10

# பொருளடக்கம்


| | பொருள் | | பக்கம் |
|---|---|---|---|
| 1 | முன்னுரை | ... | i—xxv |
| 2 | நூல் | ... | 1—38 |
| 3 | நூற்பொருளகராதி | ... | 39—44 |
| 4 | சொற்றொடரகராதி | ... | 45—60 |
| 5. | பாடபேதம் | ... | 60 |
| 6 | பிழைதிருத்தம் | ... | 61 |
| 7 | விடுபாடல்கள் | ... | 61—62 |

# முன்னுரை

ஆற்றுப்படையென்ற நூல்வகையின் இலக்கணம் தொல்காப்பியத்தின்கண்ணேயே காணப்படுகின்றது.

கூத்தரும் பாணரும் பொருநரும் விறலியும்
ஆற்றிடைக் காட்சி யுறழத் தோன்றிப்
பெற்ற பெருவளம் பெறாஅர்க் கறிவுறீஇச்
சென்றுபய னெதிரச் சொன்ன பக்கமும்

என்பது புறத்திணையியற்சூத்திரம் (36).

அரசர்கள் முதலியோர் வாழ்ந்துவந்த நகர்கட்குச் சென்று அவர்களுடைய புகழைப் பாடி மகிழ்வித்துப் புலவர்கள் ஆதரவு பெற்றுவந்த பண்டைக்காலத்தே இவ்வகைப் பிரபந்தங்கள் தோன்றுதல் இயல்பே. ஏனெனின், ஆற்றுப்படைகள் அரசர் முதலியோர்மாட்டுச்சென்று பாடிச் செல்வம்பெறுதலையே நூற்பொருளாகக் கொண்டுள்ளன. சங்ககாலத்தே பல ஆற்றுப்படைகள் தோன்றின. கூத்தராற்றுப்படை என்பது மலைபடுகடாத்திற்கு வழங்கிய ஒருபெயர். பாணராற்றுப்படைவகையிற் சிறுபாணாற்றுப்படை, பெரும்பாணாற்றுப்படையென இரண்டு நூல்கள் உள்ளன. பொருநராற்றுப்படையென்பதும் பத்துப்பாட்டினுள் ஒன்றென்பது யாவரும் அறிந்ததே. விறலியாற்றுப்படையென்பது தனிநூலாகக் காணப்படவில்லை. ஆனால் இவ்வகைப்பாட்டு, புறநானூற்றிலும் பதிற்றுப்பத்திலும் வந்துள்ளது. 'சேயிழை பெறுகுவை' (புறம். 105), 'மெல்லியல்விறலி' (புறம். 133) என்ற செய்யுட்களை உதாரணமாகக்காட்டல் தகும். கூத்தர், பாணர், பொருநர் இவர்களைப்பற்றிய ஆற்றுப்படைச்செய்யுட்களும் புறநானூற்றிற் காணப்படுகின்றன.

இவையெல்லாம் உலகவாழ்வுகருதிய (லௌகிகச்) செய்யுட்களாம். பாட்டுடைத்தலைவனிடத்துப் பொருள்பெற்று மீளலும்,

மீளும்வழியிற் கூத்தர் முதலியோரைக் காணுதலும், அவர்களைத் தலைவனிடம் வழிப்படுத்திப் பரிசில்கொள்ளச்செய்தலும் பண்டைக் காலத்து உலகியற்செய்திகளே. இவ்வாறான லௌகிக நோக்கங்களின்பொருட்டே ஆற்றுப்படைகள் தோன்றியிருத்தல்வேண்டும். வேறுநோக்கங்கள் தொடக்கத்தில் இல்லை. தொல்காப்பியர் வேறு நோக்கங்கள் குறித்து இவ்வகைநூல்கள் பிறக்கக்கூடுமெனக் கருதியவரேயல்லர். இஃது அவரது சூத்திரத்தால் தெளிவாயுள்ளது. ஆற்றுப்படைகள் பெருவழக்கிலிருந்த காலத்தின் இறுதியில் வேறு நோக்கம்பற்றியும் அவை தோன்றுதல் பொருத்தமாகும் என்ற உணர்ச்சி உண்டாயிருத்தல்வேண்டும். இரவலர்வாழ்வு எவ்வகையான் நோக்கினும் இழிவானதே. அறநூற்பெரும்புலவராகிய வள்ளுவரும்,

> 'ஆவிற்கு நீரென் றிரப்பினும் நாவிற்கு
> இரவின் இளிவந்த தில்' (குறள். 1066)

என்று கூறினர். (எள்ளி நகையாடுதற்குரிய) இச்சிறுபயன்பெறுதற் பொருட்டுத் தம்மையும் தமிழையும் இழிவுபடுத்திக்கொள்ளுதல் பெருமக்கள் வெறுக்கத்தக்கதாகவே இருக்கும். இதனை நக்கீரர் உணர்ந்து ஆற்றுப்படையின் நோக்கத்தையே முழுதும் வேறு கொண்டு அவ்வகைநூல்களுக்குப் புதியதொரு கௌரவத்தைக் கொடுத்தனரென்றுதான் நாம் கொள்ளவேண்டும். இங்ஙனம் இயற்றிய புதுநூல் முருகாற்றுப்படையாகும்.

இப்புதுநூலினைக் குறித்துப் பண்டைக்காலத்துத் தமிழறிஞர்க்குள்ளே விவாதம் நடைபெற்றது. இது நச்சினார்க்கினியரது புறத்திணையியலுரையால் நமக்கு விளங்குகிறது. ஒருசிலர் புலவராற்றுப்படையென்பதே நூற்பெயராதல்வேண்டும் என்றனர். நூலினகத்தே (அடி 284) வழிப்படுக்கப்பட்டவன் "முதுவாயிரவலன்" ஆகிய புலவன் என்பது இவர் காட்டிய காரணமாதல்வேண்டும். சிறுபாணாற்றுப்படையினும் (அடி 40), பதிற்றுப்பத்தினும் (66), புறநானூற்றினும் (48, 180) 'முதுவாயிரவல' என வருதல் நோக்கத்தக்கது. 48-ம் புறப்பாட்டுப் 'புலவராற்றுப்படை'யெனவே துறை குறிக்கப்பட்டுள்ளது. நச்சினார்க்கினியர் இப்பெயர் வழங்கவில்லை

யென்றும், 'கூத்தர்முதலியோர்கூற்றாகச் செய்யுட்செய்யுங்கால் அவர்மேல் வைத்துரைப்பினன்றிப் புலனுடைமாந்தர் தாமே புலனெறிவழக்கஞ்செய்யா'ரென்றும் கூறி மறுக்கின்றார். முருகாற்றுப்படை யென்பதற்கு 'முருகன்பால் வீடுபெறுதற்குச்சமைந்தான் ஓரிரவலனை ஆற்றுப்படுத்ததென்பது' பொருளெனவும் அவர் கூறுவர். இப்பொருளைத்தான் நாமும் கொள்ளுதல்வேண்டும். ஆனால் பிற ஆற்றுப்படைகளெல்லாம் ஆற்றுப்படுக்கப்பட்டாராற் பெயர் பெறுதலும், அந்நெறிக்கு மாறாக முருகாற்றுப்படையொன்றே பாட்டுடைத்தலைவனாற் பெயர்பெறுதலும் மனங்கொளத்தக்கன. புலவராற்றுப்படை யென்றபெயரால் நூல் நுதலிய சமயப்பொருள் விளங்கமாட்டாதுபோகவே, அப்பொருள் எளிதில் விளங்குமாறு பாட்டுடைத்தெய்வத்தின்பெயரொடுசார்த்தி இந்நூல் வழங்கலாயிற்றென்பதே உண்மையெனத் தோன்றுகிறது. இப்புதுவழக்குப் பரவிவிட்ட காரணத்தினால் பழைதாகிய புலவராற்றுப்படை யென்ற பெயர்வழக்கு வீழ்ந்ததாகல்வேண்டும்.

மேற்குறித்த விவாதமேயன்றித் தொல்காப்பியர்வகுத்த ஆற்றுப்படையிலக்கணத்தில் முருகாற்றுப்படை அடங்காதெனவும் விவாதம் நிகழ்ந்திருத்தல்வேண்டும். நச்சினார்க்கினியர் தமது வழக்கப்படி சொற்களை அலைத்துப் பொருள்கொண்டு இந்நூலும் அடங்குமெனச் சாதித்துள்ளார். 'கூத்தரும் பாணரும் பொருநரும் விறலியும், பெற்ற பெருவளம் பெறாஅர்க் கறிவுறீஇச், சென்றுபய னெதிரச் சொன்ன பக்கமும்' எனவும், 'ஆற்றிடைக் காட்சி யுறழத் தோன்றிப், பெற்ற பெருவளம்.......................... சொன்ன பக்கமும்' எனவும், இரண்டாகப் பிரித்துக்கூட்டிப் பின்னதற்கு 'இல்லறத்தைவிட்டுத் துறவறமாகிய நெறியிடத்து நிற்றல் நன்றென்றும் கண்ட காட்சி தீதென்றும் மாறுபடத் தோன்றுகையினாலே, தான் இறைவனிடத்துப்பெற்ற கந்தழியாகிய செல்வத்தை யாண்டுந் திரிந்தும் பெறாதார்க்கு இன்னவிடத்தே சென்றாற் பெறலாமென்று அறிவுறுத்தி, அவரும் ஆண்டுச்சென்று அக்கந்தழியினைப் பெறும்படி சொன்னபக்கமும்' என்று பொருளுரைத்தார். இது பொருளன்று என்பதனைச் சான்று காட்டி நிறுவவேண்டா. 'கூத்தர்முதலாயினோர் நெறியிடையே

காட்சி மாறுபடுமாறுதோன்றி......சொன்ன பக்கமும்' எனச் சேர்த்தே கொள்ளுதல்வேண்டும். இளம்பூரணர் இவ்வாறேகொண்டார். காட்சி மாறுபடுதலாவது பெருவளம் பெற்றுவரும் தமது காட்சியும் வறுமைப்பிணியால் வருந்தித் தள்ளாடிவரும் ஆற்றுப் படுக்கப்படுவார்காட்சியும் தம்முள் மாறுபடுதல். இதுவே செம்பொருள். எனவே முருகாற்றுப்படையைத் தொல்காப்பியச்சூத்திரம் கருதிற்றன்றெனலே தகுதி. இதனால் தொல்காப்பியருக்கு யாதோரிழுக்குமின்று.

இந்நூல் தோன்றியதனைக்குறித்து ஒரு வரலாறு வழங்குகிறது. திருப்பரங்குன்றத்திற் சரவணப்பொய்கையின் கரையில் ஓர் அரசமரம் நின்றது. அதிலுள்ள இலை நீரில்வீழ்ந்தால் மீனாகவும் நிலத்தில்வீழ்ந்தால் பறவையாகவும் மாறும். ஒருகால் ஓர் இலை பாதிகரையிலும்,பாதிநீரிலுமாக விழுந்தது. கரையில்விழுந்தபகுதி பறவையாகவும், நீரில்விழுந்தது மீனாகவும் அமைந்த விசித்திரப் பிராணியாக அவ்விலை மாறிற்று. பறவைப்பகுதி ஆகாயத்திற்பறக்கவும் மீன்பகுதி நீருள் மூழ்கவும் முயன்றன. அப்போது அங்குக் கரையிற் பூசைசெய்துகொண்டிருந்த நக்கீரர் ஏகாக்கிரசிந்தனையில் வழுவி இந்த அதிசயத்தைக்கண்ணுற்று இரண்டனையும் விடுவிக்க வந்தனர். சிவபூசையில் வழுவியகாரணத்தால் ஒரு பிரமராட்சசு நக்கீரரைப் பிடித்துக்கொண்டுபோய், ஒரு குகையில் அடைத்து விட்டது. அக்குகையில் இவரைப்போல் வழுவிய 999 பேர்கள் ஏற்கெனவே அடைபட்டிருந்தனர். இவரையும்சேர்த்து ஆயிரம்பேராகவே, அவ்வளவுபேரையும் உண்டுவிடவெண்ணி அப் பிரமராட்சசு நீராடிவருதற்குப்போயிற்று. அப்பொழுது நக்கீரர் முருகாற்றுப் படையைப் பாட, முருகப்பிரான் அவரைக் குகையினின்றும் விடுவித்தனர். இந்நூலை ஓதுவாருக்கு வேண்டும் வரங்கொடுப்பேமென்றும் முருகப்பிரான் அருள்செய்தனர்.

இவ்வரலாறு சில வேறுபாடுகளுடன் முதன்முதலாகத் திருவாலவாயுடையார்திருவிளையாடற் புராணத்தில் இந்திரன்முடிமேல் வளையெறிந்த திருவிளையாடலிற் காணப்படுகிறது. (44,23-28) 'குன்றமெறிந்தாய் குரைகடலிற் சூர்தடிந்தாய்' என்றுவரும் வெண்பாவும் நக்கீரர் இயற்றியதாகவே இத்திருவிளையாடல்கூறும்.

ஆனால் ஒருவிஷயம் இங்கே கவனிக்கத்தக்கது. இவ்வரலாற்றுக் குரிய செய்யுட்கள் சில பிரதிகளில் இல்லை. எனவே இவைகள் பிற் காலத் தொருவராற் சேர்க்கப்பெற்றனவென்று கருதுதற்கு இட முண்டு. இந்திரன்முடிமேல் வளையெறிந்த சரிதத்திற்கும், நக்கீரர் செயலுக்கும் யாதோர் இயைபுமில்லாமையும், இச்செய்யுட்களை நீக்கியவிடத்துக் கதை செவ்வனே நிகழுமாறும் ஈண்டு நோக்கத் தக்கன. அருணகிரிநாதர், 'கீரனுக்குகந்து........உலகமுவப்ப வென்று னருளாலளிக்குகந்த பெரியோனே' (திருப்புகழ். சமாஜப் பதிப்பு. செய் 352) எனவும், 'மலைமுகஞ்சுமந்த புலவர்செஞ்சொல் கொண்டு வழிதிறந்தசெங்கை வடிவேலா' (திருப்புகழ். 1201) எனவும் கூறுதலிலே முருகாற்றுப்படையியற்றிய நக்கீரர்வரலாற் றைச் சிறிது காணலாம். திருப்புகழாசிரியர்காலம் 15-ஆம் நூற் றூண்டாகும். திருவாலவாயுடையார் திருவிளையாடற்புராணம் 13-ஆம் நூற்றூண்டிற்குமுன்பு இயற்றியதாகலாம் என அந்நூலைப் பதிப்பித்த டாக்டர் உ. வே. சாமிநாதையர் கருதினர். இக்கால வரையறை கொள்ளத்தக்கதன்றெனவும் 16-ஆம் நூற்றூண்டுக்கே அந்நூல் உரியதெனவும் ஓர் ஆராய்ச்சியாளர் முடிவுசெய்துள்ளார். இவர் கூறுவனவே ஒப்புக்கொள்ளத்தக்கன. எவ்வாறு நோக்கினும் 13-ஆம் நூற்றூண்டுக்கு முற்பட்ட இலக்கியங்களில் முருகாற்றுப் படைவரலாறு காணப்பெறவில்லை. எனவே, இவ்வரலாறு 13-ஆம் நூற்றூண்டுமுதல் கர்ணபரம்பரையாய் வழங்கத்தொடங்கிய தெனக் கொள்ளலாம்.

இதுபோன்ற வரலாறுகளால் முருகாற்றுப்படை ஒரு சமய நூலாய்முடிந்து பெருமையிற் சிறந்துவிளங்கிற்று. நக்கீரரும் பொய்யடிமையில்லாதபுலவர்களுள் ஒருவராய்ப் போற்றப்பட்ட னர். இவரது பொய்யற்ற புலமையை விளக்குதற்கும் ஒரு வரலாறு தோன்றியது.

> 'கொங்குதேர் வாழ்க்கை யஞ்சிறைத் தும்பி
> காமஞ் செப்பாது கண்டது மொழிமோ
> பயிலியது கெழீஇய நட்பின் மயிலியற்
> செறியெயிற் றரிவை கூந்தலின்
> நறியவு முளவோ நீ யறியும் பூவே' (குறுந். 2)

என்ற குறுந்தொகைச்செய்யுள்பற்றியது இவ்வரலாறு. இச்செய்யுள் இறையனார் என்ற புலவர் இயற்றியது; "இயற்கைப்புணர்ச்சிக்கண் இடையீடுபட்டுநின்ற தலைமகன், தலைமகளை நாணின் நீக்குதற்பொருட்டு மெய்தொட்டுப்பயிறல்முதலாயின அவள்மாட்டு நிகழ்த்திக் கூடித் தனது அன்புதோற்ற நலம்பாராட்டியது" என்ற அகத்துறையிற் பாடிய பாட்டு. இதனைத் தருமியென்னும் பிரமசாரிக்கு ஆலவாயிற் சோமசுந்தரக்கடவுள் சிந்தாசமுத்தியாகப் பாடியளித்து, அவன் பொற்கிழி பெறும்படிசெய்தாரென்றும், இப்பாட்டிற்குக் குற்றங்கூறத்துணிந்த நக்கீரரைத் தண்டித்துப் பின் அருள்புரிந்தாரென்றும் ஒரு புதுவரலாறு புறப்பட்டுவிட்டது. நக்கீரர்தாமே எழுதியதெனப்படும் இறையனார் களவியலுரையில் இச்செய்யுளைக்குறித்துத் 'தலைமகளைப் புகழ்ந்து நயப்புணர்த்திற்றாயிற்றுப் போந்தபொருள்' (பவானந்தர்கழகம் 2-ஆம் பதிப்பு. பக். 49-50) எனக் காணப்படுகின்றது. இங்ஙனமிருப்பவும் இந் நக்கீரரையுளப்படுத்தி மேற்சுட்டிய வரலாறு எழுந்தது வியப்பேயாகும். இவ்வரலாற்றின்கண் நக்கீரர் சங்கறுக்கும் குலத்தினரென்று சொல்லப்படுகிறது.

இவ்வரலாறு கல்லாடமுதலிய ஒருசில நூல்களில் நக்கீரரையுளப்படுத்தாது வழங்கியுள்ளது. உதாரணமாக,

> 'பொதியப் பொருப்பன் மதியக் கருத்தினைக்
> கொங்குதேர் வாழ்க்கைச் செந்தமிழ் கூறிப்
> பொற்குவை தருமிக் கற்புட னுதவி'

எனக் கல்லாடத்தில் வந்துள்ளது (1, 10–12).

திருநாவுக்கரசுசுவாமிகளும்,

> 'நன்பாட்டுப் புலவனாய்ச் சங்கமேறி
> நற்கனகக் கிழிதருமிக் கருளினோன்காண்.' (6, 76, 3)

என்று கூறியுள்ளார். இவ்வடிகள் தருமியின்பொருட்டு இறைவனே புலவனாகச் சங்கமேறிப் பாடியருளினானென்று பொருள்படுமாறு அமைந்துள்ளமை நோக்கத்தக்கது. நக்கீரர்செயலே கூறப்படவில்லை.

ஆகவே நக்கீரரை யுளப்படுத்தாத சரிதமொன்று நாவுக்கரசரதுகாலத்திற்குமுன்பு, கி. பி. 6-ஆம் நூற்றுண்டுதொடங்கி வழங்கியிருக்கவேண்டும். அவரை யுளப்படுத்திய சரிதம் சுமார் 13-ஆம் நூற்றுண்டளவில் வழங்கத்தொடங்கியிருக்கலாம். இப் பிற்காலச் சரிதத்தானும் நக்கீரர்புலமைத்திறனையும், அஞ்சாநெஞ்சுரனையும் தமிழ்மக்கள் போற்றினர்கள்.

நக்கீரர் சாபானுக்கிரக சக்தியுடையரெனவும் நம்மவர்கள் கருதினர்கள். இக்கருத்திற்கியையக் கடைச்சங்கத்தைப்பற்றிய ஒரு வரலாறும் எழுந்தது. இக்காலத்திற்போலவே கடைச்சங்க காலத்தினும் தென்மொழி வடமொழிப் போரொன்று நிகழ்ந்தது. இப்போர் முடிவுபெறும்வரையிற் சங்கத்தாராகிய பட்டிமண்டபத்தார் அம்மண்டபத்தின் தெற்குவாயிலைத் திறவாது அடைத்துவிட்டனர். அவருள் தலைவராக நக்கீரனர் நின்று வாதத்தை நிகழ்த்திவந்தனர். எதிர்க்கட்சியில் ஒருவன் 'ஆரியம் நன்று தமிழ் தீது' என்று கூறினன். இஃது உலகம் பொறுக்கமாட்டாத சொல்லாதலால் உடனே மரணமாய் வீழ்ந்தனன். இறந்தவனை எழுப்பினல் உமது தமிழ்க்கட்சியை ஒப்புவோம் என்று எதிர்க்கட்சியினர் கூற,

'ஆரியம் நன்று தமிழ்தீ தெனவுரைத்த
காரியத்தாற் காலக்கோட் பட்டானைச்—சீரிய
அந்தண் பொதியி லகத்தியனு ராணையாற்
செந்தமிழே தீர்க்க சுவாகா'

என்ற மந்திரச்செய்யுளைச் சொல்லி உயிர்ப்பித்தனர். இதனிடையில் வடமொழிக்கட்சியிலுள்ள வேட்கோவுனை குயக்கோடன் தமிழ்க்கட்சியினரைக்குறித்து ஆனந்தச்செய்யுள் கூறிக்கொண்டிருந்தான். அவனைநோக்கி, நக்கீரர்,

'முரணில் பொதியில் முதற்புத்தேள் வாழி
பரண கபிலரும் வாழி—அரணியல்
ஆனந்த வேட்கையான் வேட்கோக் குயக்கோடன்
ஆனந்தஞ் சேர்கசுவாகா'

என்ற மந்திரச்செய்யுளைச்சொல்லி இறந்துபடச்செய்தனர். இவ்வரலாற்றை 'இவை தெற்கண்வாயில்திறவாத பட்டிமண்டபத்தார்-

பொருட்டு நக்கீரர் ஒருவன் வாழவும் [ஒருவன்] சாவவும் பாடிய மந்திரம் அங்கதப்பாட்டாயின' எனப் பேராசிரியர் செய்யுளிய லுரையில் (சூ. 178) கூறுவதிலிருந்து ஊகிக்கலாம். இதனைச் சிறிது வேறுபடுத்தித் தமிழ்நாவலர்சரிதை உரைக்கின்றது. அதில் 'நக்கீரர் நாடத்துக் குயக்கொண்டானைச் சாகப்பாடிய அங்கத வெண்பா'எனத் தலைப்புத் தரப்பட்டுள்ளது. இது நுணுகி நோக்கத் தக்கது. 'நாடத்து' என்பது பொருள்படுமாறில்லை; அது 'நாட கத்து' என்று இருத்தல்வேண்டும்போலும். இவ்வூகம் உண்மை யொடுபட்டதாயின் 'நக்கீரர்நாடகம்' என்ற நூலொன்று வழங்கிய தென்றும், அதன்கண் இவ்வரலாறு கூறப்பட்டிருந்ததென்றும் நாம் கொள்ளலாம்.

'நக்கீரர்நாடகம்' போன்றதொருநூல் முற்காலத்தில் வழங்கி வந்ததென்பதற்கு வேறொருசான்றும் உள்ளது. யாப்பருங்கல விருத்தியுரையில் (பக்-133)

> 'ஊசி யறுகை யுறுமுத்தங் கோப்பனபோல்
> மாசி யுகுபனிநீர் வந்துறைப்ப—மூசு
> முலைக்கோடு புல்லுதற்கொன் றில்லாதேன் காண்மோ
> விறக்கோடு கொண்டெரிக்கின் றேன்'

'இந்நக்கீரர்வாக்கினுள் கடையிரண்டடியும் மூன்றாமெழுத்தொன் றெதுகை வந்தவாறு காண்க' எனக் காணப்படுகிறது. இச்செய் யுள் நக்கீரர் நாடகபாத்திரமாகவேனும் கதாபாத்திரமாகவேனும் வந்துள்ள ஒருநூலிற் குரியதாதல்வேண்டும். 'தமிழறியும்பெரு மாள்கதை' என்று இக்காலத்துவழங்கும் நூலில் மேலைச்செய்யுள் சிறிது வேறுபாட்டுடன் நக்கீரர்கூறியதாக அமைந்துள்ளது. இதுவும் எனது ஊகத்தை வலியுறுத்துகிறது. யாப்பருங்கல விருத்தியில் இச்செய்யுள் பயின்றுவருதலினாலே தமிழறியும்பெரு மாள்கதையைப்போன்றதொரு கதை சுமார் கி. பி. 10-ஆம் நூற் றாண்டளவில் வழங்கிவந்ததெனக் கொள்ளலாம்.

இவ்வரலாறுகளெல்லாம் வெவ்வேறுகாலங்களில் வெவ்வேறு நோக்கங்களுடன் தோன்றி நக்கீரரது பெருமையையும் புகழையும் வளர்ப்பனவாயின. இவற்றுள் ஒன்றேனும் அவரது உண்மைச் சரிதத்தோடு தொடர்புடையதெனக் கொள்ளுதற்கில்லை.

இனி நக்கீரர்பெயரால் வழங்கும் நூல்கள் முதலியவற்றை நோக்குவோம். அவை வருமாறு:

1 அகநானூறு: 17செய்யுட்கள் (36, 57, 78, 93, 120, 126, 141, 205, 227, 249, 253, 290, 310, 340, 346, 369, 389)

குறுந்தொகை: 8 செய்யுட்கள் (78, 105, 131, 143, 161, 266, 280, 368)

நற்றிணை: 7 செய்யுட்கள் (31, 86, 197, 258, 340, 358, 367)

புறநானூறு: 3 செய்யுட்கள் (56, 189, 395)

2 பத்துப்பாட்டு: நெடுநல்வாடை,
திருமுருகாற்றுப்படை
3 கைலைபாதி காளத்திபாதித் திருவந்தாதி
4 திருவீங்கோய்மலை யெழுபது
5 திருவலஞ்சுழிமும்மணிக்கோவை
6 திருவெழுகூற்றிருக்கை
7 பெருந்தேவபாணி
8 கோபப்பிரசாதம்
9 காரெட்டு
10 போற்றித்திருக்கலிவெண்பா
11 கண்ணப்பதேவர் திருமறம்

(2–11: 11-ஆம் திருமுறை)

12 களவியலுரை
13 அடிநூல்
14 நாலடிநானூறு

இந்நூல்களை நோக்கியவுடன் 11-ஆம் திருமுறையில் அடங்கியநூல்களுள் திருமுருகாற்றுப்படையொழிய ஏனையவெல்லாம் சங்ககாலத்திற்குப் பிற்பட்டனவென்பது தெளிவாம். பிரபந்த வகையைநோக்கினும், யாப்புவகையைநோக்கினும், சொல்லின் உருவத்தைநோக்கினும், வடசொற்களின் அளவைநோக்கினும், கையாளப்பட்டுள்ள நடையைநோக்கினும் வரலாற்றுக் குறிப்பினைநோக்கினும் இவ்வுண்மை எளிதிற் புலப்படும்.

அந்தாதி, மும்மணிக்கோவை முதலியன மிகப் பிற்பட்ட பிரபந்த வகைகளாம். அந்தாதி முதலியவற்றைப் 'புதிதாகத் தாம் வேண்டிய வாற்றாற் பலசெய்யுளுந் தொடர்ந்துவரச் செய்வ'தாகிய விருந்து என்பதன்பாற்படுப்பர் பேராசிரியர் (தொல். செய். 239. உரை). கலித்துறை என்னும் பாவினம் திருவலஞ்சுழி மும்மணிக்கோவை யிற் பயின்றுவந்துள்ளது. இது மிகப் பிற்பட்டவழக்கென்பது செய்யுள்வரலாறு அறிந்தாரனைவர்க்கும் உடன்பாடாம். கைலை பாதி காளத்திபாதித் திருவந்தாதியைமட்டும் எடுத்துக்கொண்டால், அதில், நான் (96), நாங்கள் (44), உன் (14, 59), உனக்கு (77), இத்தனை (17), எத்தனையும் (86), ஆனாலும் (30, 55), காட்டுமின்கள், சூட்டுமின்கள் (36), கண்டிடுவான், உண்டிடுவான் (18), மன்னவனே (46), இருப்பன் (65) முதலிய பிற்கால உருவங்களும், அம்மான் (2), பேசு (27, 9, 79), அணுக்கர் (12), கிறி (12) முதலிய பிற்காலச்சொற்களும், சரணம் (4), தேவாதிதேவன் (5), ஈசன் (9, 38, 62), தீர்த்தன், பாசுபதம், பார்த்தன் (13), பாவித்தும் (14), தயா (14), நேசம் (17), பாதம் (18), சேமத்தால் (25), தீர்த்தம் (29), மூர்த்தி (29), கங்காளர் (30), பாலன் (33), நாதன் (34), நாமம் (38), பரமன் (49, 99), பசுபதி (50), காயம் (56), தியானிப்பார் (60), பத்தர் (71, 85, 86), ஆதரித்த (72), பாவம் (76), பாதாளம் (88), சங்கரன் (89), பாதாரவிந்தம் (99) முதலிய வடசொற்களும், விண்ணப்பம் (75, 77), நக்கன் (88) முதலிய பாகதச்சொற்களும் வந்துள்ளன. இவ்வந்தாதியினகத்தே கோச்செங்கட்சோழன் (32), மார்க்கண்டன் (33), உபமன்யு (81), சலந்தரன் (84) முதலியோர் வரலாறுகள் காணப்படுகின்றன. இவையனைத்தும் சங்கநூல்களிற் காணப்படாதன; பிற்காலநூல்களிற் பெருவழக்கின. கோபப்பிரசாதத்தில் கண்ணப்பர், சண்டேசர், சாக்கியர், கோச்செங்கட்சோழர் வரலாறுகளும் கூறப்படுகின்றன. இவையும் சங்ககாலத்து நூல்களில் அறியப்படாத வரலாறுகள்.

அன்றியும் சிலசெய்யுட்கள் பழையகருத்துக்களைப் பொன்னேபோற் போற்றுகின்றன. உதாரணமாக,

'சொல்லும் பொருளுமே தூத்திரியு நெய்யுமா
நல்லிடிஞ்சில் என்னுடைய நாவாகச்—சொல்லரிய
வெண்பா விளக்கா வியன்கயிலை மேலிருந்த
பெண்பாகர்க் கேற்றினேன் பெற்று' (1)

என்பது,

'உடம்பெனும் மனையகத்துள் உள்ளமே தகளியாக
மடம்படும் உணர்நெய் யட்டி யுயிரெனுந் திரிமயக்கி
இடம்படு ஞானத் தீயால் எரிகொள விருந்துநோக்கில்
கடம்பமர் காளை தாதை கழலடி காணலாமே.

என்ற அப்பர்வாக்கை நினைப்பூட்டுகிறது.

'... ... ... நஞ்சு
உண்டமையால் உண்டிவ் வுலகு' (8)

என்பது,

'கண்ணோட்ட மென்னுங் கழிபெருங் காரிகை
உண்மையா னுண்டிவ் வுலகு' (குறள்-571)

என்ற திருக்குறளை அடியொற்றிவந்துள்ளது.

'கூடியிருந்து பிறர்செய்யுங் குற்றங்கள்
நாடித்தங் குற்றங்கள் நாடாதே' (91)

என்பது,

'பிறன்பழி கூறுவான் தன்பழி யுள்ளுந்
திறன்றெரிந்து கூறப் படும்' (குறள்-186)

'ஏதிலார் குற்றம்போற் றங்குற்றங் காண்கிற்பின்
தீதுண்டோ மன்னு முயிர்க்கு' (குறள்-190)

என்பவற்றின் பொருளையுட்கொண்டு வந்துள்ளது.

'செய்ய சடைமுடியென் செல்வனையான் கண்டெனது
கையறவும் உள்மெலிவும் யான்காட்டப்—பையவே
காரேறு பூஞ்சோலைக் காளத்தி யாள்வார்தம்
போரேறே இத்தெருவே போது' (78)

என்பது,

'போரகத்துப் பாயுமா பாயா துபாயமா
ஊரகத்து மெல்ல நடவாயோ—கூர்வேல்
மதிவெங் களியானை மாறன்றன் மார்பங்
கதவங்கொண் டியாமுந் தொழ'

என்பது போன்ற முத்தொள்ளாயிரச் செய்யுட்களின் முறையைப் பின்பற்றி அமைந்தது.

செய்யுள்நடைநோக்கினும் இப்பிரபந்தங்களின் நடை பிற்பட்ட காலத்ததாகும்.

> 'கூறுய்நின் பொன்வாயாற் கோலச் சிறுகிளியே
> வேறுக வந்திருந்து மெல்லெனவே—நீல்தாவு
> மஞ்சடையும் நீள்குடுமி வாளருவிக் காளத்திச்
> செஞ்சடையெம் ஈசன் திறம்' (62)

என்ற செய்யுள் மிகஅழகாயுள்ளது. இதன்கண்ணுள்ள ஒவ்வொரு சொல்லும் (காளத்தி, ஈசன் என்பன தவிர) சங்கச் செய்யுட்களிற் காணக்கூடியனவே. எனினும் இதன் நடை வேறு; சங்கச் செய்யுட்களின் நடை வேறு. தமிழ்நடையைக் கூர்ந்து ஆராய்வோர் இது பிற்பட்ட நடையென எளிதிற் கூறிவிடுவர். 'வேறுகவந்திருந்து' என்பது நடையின் வேற்றுமையைத் தெற்றெனப் புலப்படுக்கின்றது.

மேற்காட்டிய காரணங்கள் அந்தாதி முதலிய 11-ம் திருமுறை நூல்கள் சங்ககாலத்திற்குப் பிற்பட்டனவென்பதையும், இவற்றை இயற்றிய நக்கீரதேவநாயனார் சங்கப்புலவராகிய நக்கீரர் அல்லரென்பதையும் தெளிவிக்கப் போதியவை. கற்றறிவாளர் எளிதில் ஒப்புக்கொள்ளும் இம்முடிபினைக் குறித்து இன்னும் பல கூறுதல் வேண்டற்பாலதன்று. இந் நக்கீரதேவநாயனார் இயற்றியருளிய திருவெழுகூற்றிருக்கை யாப்பருங்கலவிருத்தியில் எடுத்தாளப்படுதலின் இவரதுகாலம் 11-ம் நூற்றுண்டிற்கு முற்பட்டது. கண்ணப்பர்சரித்திரத்திற்குக் கொடுக்கும் தலைமையால், இவரை மாணிக்கவாசகசுவாமிகள்காலமாகிய 9-ம் நூற்றுண்டினராகக் கொள்ளுதல் பொருந்தலாம்.

இலக்கண ஆசிரியராகிய ஒரு நக்கீரரும் நமக்குப் புலப்படுகிறார். 'அடிநூல்' என்ற செய்யுளிலக்கணமொன்று யாப்பருங்கல விருத்தியிற் காட்டப்பட்டுள்ளது. இதனை இயற்றியவர் நக்கீரர் எனவும் குறிக்கப்பட்டுள்ளது. இதினின்றும்,

> ஐஞ்சீ ரடுக்கலு மண்டில மாக்கலும்
> வெண்பா யாப்பிற் குரிய வல்ல (யாப். வி. பக். 348)

என்ற சூத்திரம் மட்டுமே இப்போது நமக்குக் கிடைப்பது. நூற்

பாவால் இஃது இயன்றதாதல்வேண்டும். இதனைப் பின்பற்றிக் கலிவிருத்தத்தால் இயன்ற பிறிதொருநூலும் முற்காலத்து வழங்கியதாதல்வேண்டும். யாப்பருங்கலவிருத்தியில் 414-ம் பக்கத்தில் வரும்.

> சேரும் நேரடிப் பாவிலேந் சீரடி
> யேரும் வெள்ளையல் லாவழி யென்பது
> சோர்வி லாததோல் காப்பியத் துள்ளுநக்
> கீர ஞரடி நூலுள்ளுங் கேட்பவே.

என்று வருஞ் செய்யுளால் இது தெரியவருகின்றது. இவ்விருத்தியுரையில் 'நாலடிநாற்பது'(பக். 32, 121) என வொருநூல் குறிக்கப்பட்டுள்ளது. யாப்பருங்கலக்காரிகையில் இந்நூல் அவிநயாது யாப்பதிகாரத்துக்கு அங்கமாக அமைந்தது எனக் கூறப்படுகிறது. இது வெண்பாவினுல் இயன்றநூலென்பது விருத்தியுரைமேற்கோள்களால் விளங்கும். இதனை நக்கீரர் இயற்றியதாகக்கொண்டு நற்றிணைப்பதிப்பாசிரியர் அதன் முன்னுரையிற் குறித்தனர். டாக்டர் சாமிநாதையரவர்களும் தமது பத்துப்பாட்டுப்பதிப்பிற் பாடினோர்வரலாறு கூறுமிடத்தில் 'நக்கீரர் நாலடிநாற்பது' எனவே எழுதியுள்ளார்கள். இங்ஙனம் கூறுவதற்கு ஆதாரம் காணக்கூடவில்லை.

இறையனர்களவியலுக்கு உரைகண்டவரும் இவர்தாமோ என ஐயுறற் கிடமுண்டு. இவராகவேயிருப்பின், இவரதுகாலம் பாண்டிக்கோவையின் பாட்டுடைத்தலைவராகிய நெடுமாறர்காலமாகும். அஃதாவது 7-ஆம் நூற்றுண்டின் இடைப்பகுதியாகும். வேறொருவிஷயமும் இங்கே கூறுதற்குரியது. யாப்பருங்கலவிருத்தியில் (பக். 217) 'நக்கீரர் நாலடிநானூற்றுவண்ணத்தால் வருவனவுமெல்லாம் தூங்கிசைச்செப்பலோசை........முத்தொள்ளாயிரத்துவண்ணத்தால்வருவனவுமெல்லாம் ஒழுகிசைச்செப்பலோசை' என்று காணப்படுகிறது. இங்கே நாலடிநானூறு, முத்தொள்ளாயிரம் என்பன நூற்பெயர்களாம். 'நாலடியார்' என இக்காலத்து வழங்கும் கீழ்க்கணக்குநூலே நாலடிநானூறென்பது. மயிலைநாதர் 'அளவினுற் பெயர்பெற்றன பன்னிருபடலம், நாலடிநானூறு முதலாயின' என்பர் (சூ. 48, உரை). காரிகையுரைகாரர்

'திருவள்ளுவப்பயன், நாலடிநானூறு முதலாகிய கீழ்க்கணக்குள்ளும்' என்பர் (40. உரை). 'நக்கீரர் நாலடிநானூறு' என்பது இறையனார்களவியல் என்பதுபோல நக்கீரர் இயற்றிய நாலடிநானூறு எனப் பொருள்படுதல்வேண்டும்.[1] இஃது உண்மையாயின் இந் நக்கீரர் பெருமுத்தரையர் காலத்தவராவர். ஏனெனின் பெருமுத்தரையரை இரண்டிடங்களில் (200, 296) நாலடி குறிப்பிடுகின்றது. இப்பெருமுத்தரையரது காலம் 7-ஆம் நூற்றாண்டின் இடைப்பகுதியாகும். இவர் செந்தலைச்சாசனத்தால் அறியப்படும் பெரும்பிடுகு முத்தரையராவர் (புதுக்கோட்டை மான்யுவல், வால்யூம் II, பகுதி I. பக்கம் 563-7). முற்குறித்த காலத்தோடு இதுவும் ஒத்துவருதலால், களவியலுரைகண்ட நக்கீரரே இந் நாலடிநானூற்றை இயற்றியவரென்பது அமைதியுறுகின்றது. நாலடி சமணநூலாதலின், இவர் சமணராதல்வேண்டும்.

முருகாற்றுப்படையியற்றிய நக்கீரர் மிக முற்பட்டவராக இருக்கவேண்டும் என்பது ஆற்றுப்படையின் நடையைநோக்கிய அளவிலே எளிதில் ஊகிக்கத்தகும். இதன் நடை சங்கச்செய்யுட்களின் நடையோடு ஒத்துள்ளது. எனினும் சில வழக்காறுகள் மயக்கத்தை உண்டுபண்ணுகின்றன.

> 'தாவில் கொள்கைத் தந்தொழின் முடிமார்
> மனனேர் பெழுதரு வாணிற முகனே' (89–90)

இங்கே முடிமார் என்பதனை ஆறனுருபுதொக்கபெயராகக்கொண்டு, 'முடிப்பவருடைய' என இங்கு வெளியிடப்பெறும் உரையின் ஆசிரியரும், நச்சினார்க்கினியரும் பொருளெழுதினர். இப்பிரயோகம் இலக்கணத்தொடு பொருந்துவதன்றென்பது,

> மாரைக் கிளவியும் பல்லோர் படர்க்கை
> காலக் கிளவியொடு முடியு மென்ப. (தொல்-வினை. 10)

என்ற தொல்காப்பியச்சூத்திரமும் அதன் உரைகளும் நோக்கியறியலாம். அன்றியும், இலக்கணத்திற்குப் பொருந்தாமையோடு,

---

[1] இதனை ஒப்புக்கொள்வதிற் பல தடைகள் உள்ளன. ஆனால் நக்கீரர் நாலடிநானூறு என்பதற்கு வேறுபொருள் கூறுதல் ஏலாது. யாப்பருங்கல வுரைக்குத் திருந்தியபதிப்பு வெளிவரின் இதனைத் தெள்ளிதின் அறியக்கூடும்.

சங்க இலக்கியவழக்கிற்கும்[1] முற்றும் மாறாகவுள்ளது. முருகாற்றுப் படையிலேயே ஓரிடத்து (வரி-173) 'பெறுமுறைகொண்மார்....... வந்துடன்காண' என வழக்கொடுபொருந்திய பிரயோகமும் காணப்படுகின்றது.

பிறிதோரிடத்து (வரி-168) 'ஒன்பதிற்றிரட்டி யுயர்நிலை பெறீஇ யர்' என வருகின்றது. இங்கே 'பெறீஇயர்' என்ற சொல் கவனித் தற்குரியது. இவ்வாய்பாட்டுச்சொற்கள் [2]எச்சமாகச் சில இடங்களி லும், [3]வியங்கோளாகப் பல இடங்களிலும் வருகின்றன. வேறு பொருள்களில் இவை வந்தனவாகத் தெரியவில்லை. இவ்வழக்கிற்கு மாறாகப் 'பெற்றவர்' என்னும் பொருளில் முருகாற்றுப்படையில் வந்துள்ளது.

இவ்வாறே மற்றோரிடத்துப் 'பெறலரும் பரிசில் நல்குமதி' (295) எனக் காணப்படுகின்றது. 'மதி' என்பது முன்னிலைக்குரிய அசைச்சொல்லாகும். இது,

> மியாயிக மோமதி இகுஞ்சின் னென்னும்
> ஆவயி னாறு முன்னிலை யசைச்சொல் (சொல். இடை. 26)

என்னும் தொல்காப்பியச்சூத்திரத்தால் நன்குணரப்படும். 'நீத்த லோம்புமதி' (நற்றிணை, 10) முதலிய வழக்குக்களையும் காண்க. தன்மை, படர்க்கைகளில் இகும், சின் என்ற இரண்டுசொற்களும் வருமேயன்றி 'மதி' வருதல் இல்லை. இது,

> அவற்றுள்,
> இகுமுஞ் சின்னும் ஏனை யிடத்தொடும்
> தகுநிலை யுடைய என்மனார் புலவர். (இடை. 27)

---

[1] செப்பங்கொண்மார் (குறுந். 16), செய்வினைமுடிமார் (குறுந். 309), பேண்மார் (அகம். 35), கொண்மார் (அகம். 67), உய்ம்மார் (அகம். 207), சாஅய்மார்(கலி. 80), எள்ளுமார் (கலி. 81), கொண்மார் (புறம். 15), அறு மார் (புறம். 93), உண்மார் (புறம். 168), இறுமார் (புறம். 282), இடுமார் (புறம். 325) முதலிய பிரயோகங்கள் யான் கூறியதனைத் தெளிவிக்கும்.

[2] உணீஇயர் (அகம். 106); உடீஇயர் (அகம். 59)

[3] நிலீஇயரோ (புறம். 2); செலீஇயர், நிலைஇயர் (புறம். 24); பணி யியர், செலியர்; இலியர் (புறம். 6); பெறீஇயர் (குறுந். 75); பெறீஇயரோ (குறுந். 83,277); இறீஇயர் (அகம்.49); படீஇயர் (அகம். 145) தவாஅலிய ரோ, அறுஅலியரோ (அகம். 338) பணீஇயர் (நற். 10)

என்னுஞ் சூத்திரத்தால் அறியலாகும். நச்சினார்க்கினியர் 'மதி' படர்க்கையிடத்தும்வரும்என்பதனைத் 'தகுநிலையுடைய(இடை.27) என்பதனானுதல், 'அவ்வச்சொல்லிற் கவையவை' (இடை.48)என்ற சூத்திரத்தானுதல் அமைத்துக்கொள்க என்று கூறினர். இது தம் கொள்கைக்குத் தாமேயாதாரம் ஆவதன்றிப் பிறிதில்லை. 'நல்கு' என்பதனை முற்றுக்கிநிறுத்து 'மதிபலவுடன்' என்றியைப்பது இலக்கண இலக்கிய வழக்குகளைப் புறக்கணித்தல்கூடாதென்னுங் கருத்தால் வலிந்து பொருள்கூறுதலேயாகும்; அது கொள்ளத் தக்கதன்று. ஆசிரியரது பெருந்தகுதியைநோக்கி இப்பிரயோகங் களை 'ஆர்ஷம்' எனக்கொள்ளுதலே தக்கதாகும்.

சங்கநூல்வழக்கோடு இங்ஙனம் மாறுபடுதலேயன்றி, நக்கீரர் இயற்றிய மற்றைச் சங்கச்செய்யுள்வழக்கொடும் மேற்காட்டிய பிரயோகங்கள் முரணுகின்றன.[1] இவற்றை நோக்கும்போது இவ் வாற்றுப்படையை இயற்றியவர் தொகைநூல்களிற் காணப்படுபவ வரும், நெடுநல்வாடையின் ஆசிரியருமாகிய நக்கீரரின் வேறுவ ரெனத் தோன்றுகிறது.

இதற்கேற்ப இருவரது உலகமும் வெவ்வேறாக உள்ளன. தொகைநூற்கவிஞருள் ஒருவராகிய நக்கீரர் சங்கப்புலவர்கள் பிறரோடொப்ப, அரசர்கள், குறுநிலமன்னர் முதலியோரது ஆதர வில் வாழ்ந்துவந்தவர். பாண்டியர்களுள் தலையானங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியன் இவரது காலத்தரசன். இவன் ஆலங் கானத்துச்செருவில்,

---

[1] 'ஒழுகுமதி' எனப் புறத்திலும் (56), 'ஓம்புமதி' என நற்றிணையி லும் (358) வருகின்றன. 'நிலைஇயர்' எனப் புறத்திலும் (56), 'தேயர்' என நற்றிணையிலும் (197) காண்கின்றன. தருமார் (141),அயர்மார் (205), நிறுமார் (389) என அகத்திலும், 'அயர்மார்' என நற்றிணையிலும் (258), பெய்ம்மார் (54) புணர்மார் (67) என நெடுநல்வாடையிலு முள்ளன. ஈண் டெல்லாம் இச்சொற்கள் மேலை முருகாற்றுப்படைவழக்கொடு மாறுபடு கின்றன.

'சேரல் செம்பியன் சினங்கெழு திதியன்
போர்வல் யானைப் பொலம்பூண் எழினி
நாரறி நறவின் எருமை யூரன்
தேங்கம ழகலத்துப் புலர்ந்த சாந்தின்
இருங்கோ வேண்மான் இயல்தேர்ப் பொருநனென்று
எழுவர் நல்வல மடங்க வொருபகல்
முரசொடு வெண்குடை யகப்படுத் துரைசெலக்
கொன்று களம் வேட்ட'னன் (அகம். 36)

என்ற செய்தியை நக்கீரர் அறிவுறுத்துப் புகழுகிறார். நெடுநல் வாடை என்னும் அழகிய செய்யுள் இவ்வாலங்கானத்துச் செரு வையே குறித்ததெனெ நச்சினார்க்கினியர் கூறினர். இவன் 'முதுநீர் முன்றுறை முசிறியை' முற்றுகையிட்ட செய்தியொன்றும் அக நானூற்றுச்செய்யுளால் (57) விளங்குகிறது. இப்பேரரசன் பசும் பூட்பாண்டியன் (அகம். 253), பசும்பூட்செழியன் எனவும் வழங் கப்பட்டான். இது ஒரு புறநானூற்றுச் செய்யுளால் (76) புலனுகின் றது. கடற்கரையில் இவனுக்குரிய மருங்கூர்ப்பட்டினத்தின் அழ கையும், ஆவணத்தின் சிறப்பையும் பாராட்டிக்கூறுகிறார் (அகம். 227, நற்றிணை. 258, 358); இப்பட்டினம் தழும்பன் என்பவனது ஊனூருக்கு 'உம்பர்' உள்ளது (அகம். 227); கொங்கர்கள் இவனுல் துரத்தியடிக்கப்பட்டார்கள்; அவ்வெற்றியால் பலநாடுகள் இவன் வசமாயின (அகம். 253). பெருங்குளம் ஒன்றை அமைத்துத் தனதுநாட்டுக் கழனிகள் பயிர்செழிக்கச்செய்தனன்; இக்குளம் வாணன் என்பவனது சிறுகுடி என்னும் ஊர்க்கருகில் இருந்தது (நற். 340). மோகூர்மன்னனும் (மதுரைக்காஞ்சி. 508) நெடுஞ் செழியனது வாய்மொழிகேட்பவனுமாகிய (மதுரைக். 772) பழை யன்மாறன் கூடற்போரிலே கிள்ளிவளவனைவென்று கோதைமார் பன் என்னும் சேரன் மகிழும்படி வளவனதுநாடுகள் பலவற்றைக் கவர்ந்து பாண்டிநாட்டைப் பெருகச்செய்தனன் (அகம். 346). கூடல்நகரின் நாளங்காடியிலே பலவகை நறும்பண்டங்களும் வைக் கப்பெற்றிருந்ததனுலே இனிய நறுமணம் கமழ்ந்துகொண்டிருந் தது (அகம் 93). இலவந்திகைப்பள்ளித்துஞ்சிய நன்மாறனும்

நக்கீரர்காலத்தவனே. இவன் நெடுஞ்செழியனுக்கு எம்முறையி னன் என்பது விளங்கவில்லை; ஒருகால் மகனாயிருப்பினும் இருக்க லாம். இந் நன்மாறனை நக்கீரர் (புறம். 56) பூவைநிலைத் துறையில்,

'கூற்றொத் தீயே மாற்றருஞ் சீற்றம்
வலியொத் தீயே வாலி யோனைப்
புகழொத் தீயே இகழுந ரடுநனை
முருகொத் தீயே முன்னியது முடித்தலின்'

எனத் தெய்வங்களோடு ஒப்பிட்டு,

'யவனர், நன்கலந் தந்த தண்கமழ் தேறல்
பொன்செய் புனைகலத் தேந்தி நாளும்
ஒண்டொடி மகளிர் மடுப்ப மகிழ்சிறந்து
ஆங்கினி தொழுகுமதி ஓங்குவாண் மாற'

என வாழ்த்துகின்றார்.

சோணாட்டில் உறந்தைப்பிரதேசம் தித்தனுக்கு உரியதா யிருந்தது(புறம். 395). இவ்வுறந்தை நிதியாற் பெயர்சிறந்திருந் தது (அகம்.369). அங்கே அறங்கெழுநல்லவையொன் றிருந்தது (அகம். 93). இந்நகரின் கீழ்பாலுள்ள பிடவூரில் பெருஞ்சாத்தன் என்னும் வள்ளல் வாழ்ந்துவந்தனன் (புறம். 395). காவிரிம்பூம் பட்டினத்தில் பொலம்பூட்கிள்ளி அரசுபுரிந்துவந்தனன். இவன் கோசரதுபடையை அழித்து அவர்கள்நாட்டைக் கைப்பற்றினன் (அகம். 205). பழையன்மாறனால் இக்கிள்ளி தோல்வியுற்றான் (அகம். 346). இடையாறு என்னும் நகர் முற்காலத்தில் கரிகால் வளவனுக்கு உரிமையாயிருந்து நக்கீரர்காலத்தும் சிறப்புற்றிருந் தது (அகம். 141). காவிரிபாயும் கூற்றமொன்றில் எவ்வி அரசு புரிந்துவந்தான் (அகம்.126). இவன்சொல்லைக் கேளாது திதியனுக் குரிய காவன்மரமாகிய புன்னையைவிரும்பி அவனோடு அன்னி யென்பவன் பொருதழிந்தான் (அகம். 126).

சேரநாட்டிற் கோக்கோதைமார்பன் அரசுபுரிந்துவந்தனன் (அகம்.346). இவனுக்கு வானவரம்பன் என்றொரு பெயரும் வழங்

கியது (அகம். 389). இவனது தலைநகர் தண்ணான்பொருநையின் கரையிலுள்ள கருவூர் (அகம்-93). தொண்டியிலே குட்டுவன் அரசு புரிந்தான் (அகம். 290).

மூவேந்தரும் பாரியின் பறம்பை முற்றுகையிடக் கபிலர் தமது மதித்திறத்தால் தூரத்தேநின்று நெற்கதிர்கள் கொணர்வித்துப் பஞ்சத்தைநீக்கினார் என்ற பழஞ்செய்தியை நக்கீரர் வியந்து பாராட்டுகின்றனர் (அகம். 78).

தொண்டைநாட்டிற் பொலம்பூட்டிரையன் கடற்கரைப் பட்டினமாகிய பவத்திரியில் அரசாண்டுவந்தனன் (அகம். 340). வேம்பியென்னும் நகரில் முசுண்டையென்னும் குறுநிலத்தரசன் சிறந்துவிளங்கினான் (அகம். 249). அயிரியாற்றைத் தன்னகத்தே கொண்ட நாட்டிலே வடுகர்பெருமகனாகிய எருமையென்பவன் வாழ்ந்துவந்தனன் (அகம். 253). சிறுகுடி யென்னும் நகரிலே அருமன் என்ற ஒரு போர்வீரன் விளங்கினன் (நற். 367). கோடையென்னும் மலையிலே மழவர் என்ற ஓரினத்தவர் இருந்தனர். இவர்கள் மயிற்றூவியாற்செய்த மாலையை அணிந்துவந்தனர் (அகம். 249).

யவனர்கள் மதுவை இயற்றிப் பக்குவப்படுத்தித் தமது நாட்டிலிருந்துகொண்டுவந்து தமிழ்நாட்டு அரசர் முதலியோரை உண்பித்துக் களிக்கும்படிசெய்தனர் (புறம். 56).

இந்நக்கீரருக்குத் தமிழ்நாடு தம்மைப்போன்றார் பெறும் பரிசிலின்பொருட்டு உளதாகிய உலகமாகத் தோன்றிற்று. இரவலர்க்கு அருங்கலம் அருகாது ஈதலே அரசன் மேற்கொள்ளவேண்டும் ஒழுக்கமென இவர் கருதினர் (புறம். 56). செல்வத்துப்பயன் ஈதலே (புறம்.189) என வற்புறுத்துகின்றார். இப்பரிசிலின்பொருட்டுச்சேர சோழ பாண்டிய நாடுகளிலும் குறுநிலமன்னர் நகர்களிலும் வள்ளல்கள் ஊர்களிலும் சுற்றித்திரிந்து பாடியிருக்கின்றார். தெய்வங்களைக்கூட மக்கட்பிறப்புவரை இழித்துக்கொணர்ந்து, தாம் பரிசிலின்பொருட்டுப் பாடுகின்ற அரசர்களை ஒப்பிடற்குரிய

பொருள்களாக்கிவிடுகின்றனர். மகளிர் பொற்கலத்தில் ஏந்திக் கொடுக்கும் மதுவுண்டு களித்தலையே சிறந்த வாழ்வென அரசர்க்கு அறிவுறுத்தி ஆசிகூறுகின்றார்.

இவ்வுலகத்திற்கும் ஆற்றுப்படையியற்றிய நக்கீரர் மனவுலகத்திற்கும் பெரிதும் வேறுபாடுண்டு. மறந்தும் பொருட்பரிசில் அவ்வுலகில் இல்லை. அரசர்கள், சிற்றரசர்கள், வள்ளல்கள் யாரும் அங்கில்லை. முத்தியாகிய பரிசிற்கே தாம் முயன்று பிறரையும் அவ்வழிச் செலுத்துகின்றார். 'தாம் பெற்ற பேறு பெறுக இவ்வையகம்' என்பதே இவரது கொள்கை. கீழ்மக்களது அநாசாரமான வழிபாட்டினும் தெய்வங்கொள்கைகண்டு இன்புறுகிறார். யாண்டும் இறைவனுண்மையை உள்ளூர உணர்கின்றார்.

'காடுங் காவும் கவின்பெறு துருத்தியும்
யாறுங் குளனும் வேறுபல் வைப்பும்
சதுக்கமுஞ் சந்தியும் புதுப்பூங் கடம்பும்
மன்றமும் பொதியிலும் கந்துடை நிலையினும்
... ... ... ...
வேண்டினர் வேண்டியாங் கெய்தினர் வழிபட
ஆண்டாண் டுறைதலும் அறிந்த வாறே' (முருகு. 223-249)

எனப் பறைகொட்டுகிறார். அவனது திருவிளையாடல்களைப் புராணவுலகிற் கண்டு களிக்கின்றார். இவர் முற்கூறிய நக்கீரரின் முற்றும் வேறுவர் என்பது சொல்லவும்வேண்டுமோ? தாம் வழிபடுதெய்வத்தோடு மக்கட்பிறப்பினனொருவனை இந்நக்கீரர் ஒப்புக்கூறுவாரா என்பதையும், தெய்வபத்தியிற் சிறந்த இப்புலவர், 'மதுவைப் பொற்கலத்தேந்தி மகளிர் ஊட்ட மகிழ்ச்சியோடு இனிது ஒழுகுவாயாக' என ஓரரசனை வாழ்த்துவரா வென்பதையும் சிந்தித்தல் வேண்டும்.

தொகைநூற்புலவராகிய நக்கீரர் சிறந்த கவித்வம் படைத்தவர். அவரது நெடுநல்வாடை சங்கச்செய்யுட்களில் முன்னணியில் வைத்தற்குரிய தகுதிவாய்ந்தது. இவ்வரிய செய்யுளில்வரும் சில

செய்திகள் இவரதுகாலத்தை ஒருவாறு அறுதியிடுதற்கு உதவு கின்றன. மதுரை மாடமோங்கிய மல்லன்மூதூராக விளங்குகின் றது. அதன் தெருக்கள் ஆறுகிடந்தனபோன்றுள்ளன. அங்கே மிலேச்சர்கள் மாலைப்பொழுதில் தேறலையுண்டு, மழைதூறிக்கொண் டிருக்கவும் அதனைப் பொருட்படுத்தாது, தெருக்களில் திரிகின்றார் கள். அரசனது அரண்மனை மிக்க அழகுவாய்ந்துள்ளது. அதனை மனைநூல்விதிப்படி ஒரு நன்னாளில் இயற்றத்தொடங்கினர்.

'விரிகதிர் பரப்பிய வியல்வாய் மண்டிலம்
இருகோற் குறிநிலை வழுக்காது குடக்கேர்பு
ஒருதிறஞ் சாரா அரைநா ளமையத்து
நூலறி புலவர் நுண்ணிதிற் கயிறிட்டுத்
தேஎங் கொண்டு தெய்வம் நோக்கிப்
பெரும்பெயர் மன்னர்க் கொப்ப மனைவகுத்'தனர். (73-8)

வாயில்நிலையின் உத்தரக் கற்கவி நடுவே திருவும் அதன் இரு புறத்தும் இரண்டு செங்கழுநீர்ப்பூவும் இரண்டு பிடியுமாக வகுக்கப் பட்டுள்ளது. இவ்வுத்தரக்கற்கவி,

'நாளொடு பெயரிய கோளமை விழுமரத்து' (82)

என்னப்படுகின்றது. 'உத்தரம் என்னும் நாளின் பெயர்பெற்ற செருகுதல் பொருந்தின பெரியமரம்' என்பது பொருள். அரண் மனையிற் கர்ப்பக்கிருகம் ஒன்று மிகவும் அழகாக அமைக்கப் பட்டிருக்கிறது. இம்மனைப்பகுதி,

'கருவொடு பெயரிய காண்பி னல்லில்' (114)

என்று கூறப்படுகிறது. அந்தப்புரத்திலே அரசியிருக்கும் கட்டி லின் மேற்கட்டியில்,

'புதுவ தியன்ற மெழுகுசெய் படமிசைத்
திண்ணிலை மருப்பின் ஆடு தலையாக
விண்ணூர்பு திரிதரும் வீங்குசெலன் மண்டிலத்து
முரண்மிகு சிறப்பிற் செல்வனொடு நிலைஇய
உரோகிணி, (159—163)

எழுதப்பட்டுள்ளது.

மேற்காட்டிய அடிகளிலே மனையமைப்பிற்குரிய வடமொழிப் பெயர்க்குறிப்புக்கள் வந்துள்ளன. மேஷராசியிலிருந்து தொடங்கிப் பன்னிருராசிகளினும் சூரியன் செல்கின்றமை குறிக்கப்பட்டிருக்கிறது. உரோகிணிநக்ஷத்திரமும் கூறப்பட்டுள்ளது. கிரேக்கர்களிடமிருந்து ராசியைப்பற்றிய அறிவு சுமார் கி. பி. 200-ல் தமிழ்நாட்டிற் புகுந்திருக்கலாம் என்று ஆராய்ச்சியாளர் கருதுகின்றனர். இதற்கேற்ப, யவனரும் நக்கீரரால் குறிப்பிடப்படுகின்றனர். எனவே சுமார் கி. பி. 250-ல் நக்கீரரால் நெடுநல்வாடை இயற்றப்பட்டிருக்கலாம். கபிலர், பாரி, கரிகாலன் முதலியோர்களெல்லாம் இந்நக்கீரருக்கு ஒருநூற்றாண்டிற்கு முற்பட்டவராகலாம். இவர் மதுரைக் கணக்காயனார்மகனார் நக்கீரனாராகவிருக்கலாம். சங்க காலப்புலவர் இவரேயாதல்வேண்டும்.

முருகாற்றுப்படை இயற்றப்பெற்றகாலத்தில் பௌராணிகச் செய்திகள் தமிழ்நாட்டிற் பரவிவிட்டன. சங்ககாலத் தமிழ் வழக்காறுகளும் நன்குணரப்படவில்லை யென்பதும் மேலே காட்டப்பட்டது. ஆதலால், சங்கப்புலவராகிய நக்கீரருக்குச் சற்றேறத்தாழ இருநூறாண்டுகளின்பின் அவர் பெயர்கொண்ட பிறரொருவரால் முருகாற்றுப்படை இயற்றப்பட்டதாகலாம். எனவே உத்தேசம் கி. பி. 450-ல் முருகு-நக்கீரர் வாழ்ந்தவரெனக் கொள்ளலாம். முருகாற்றுப்படை 11-ஆம் திருமுறையிற் சேர்க்கப்பட்டுள்ளதும் இப்பிற்காலத்தையே ஆதரிப்பதாகலாம்.

பத்துப்பாட்டு சங்கநூலாயிற்றே! அதன்கண் உள்ள ஒருநூல் சங்ககாலத்திற்குப்பின் தோன்றியதெனக்கூறல் அமையுமோ? என்ற கேள்வி இயற்கையாக எழலாம். ஆனால், சில குறிப்புக்கள் ஞாபகத்தில் வைக்கத்தகுந்தன. தொகைநூல்களிற் பெரும்பாலனவற்றைத் தொகுத்தாரும், தொகுப்பித்தாரும் இவரென்று அவ்வத்தொகுதியின் இறுதியிற் காணப்படுகின்றது. எஞ்சியுள்ளன முற்றும் அகப்படவில்லையாதலால் அவைபற்றி இவ்விவரங்கள் அறியக்கூடவில்லை. பத்துப்பாட்டு அங்ஙனமன்று. முற்றுங் கிடைத்துவிட்டது; எனினும் இவ்விவரங்கள் காணப்படவில்லை.

இதனால், தொகைநூல்களோடொப்ப அவை தொகுக்கப்பெற்ற காலத்தில் பத்துப்பாட்டுத் தொகுக்கப்பெறவில்லையென்பது தெளிவு. 'பத்துப்பாட்டு' என்ற பெயரும் இத்துணிபினையே ஆதரிக்கின்றது. தொகைநூல்களுக்குக் கடவுள்வாழ்த்துச்செய்யுள் அமைந்துள்ளதைப்போல முருகாற்றுப்படை முதலாவது வைக்கப்பெற்றிருப்பதை நோக்கினால், அவற்றைப்பின்பற்றி இந்நூல் முறைபடக் கோக்கப்பட்டதாதல்வேண்டும். பத்துப்பாட்டிற் செய்யுள் ஒவ்வொன்றையும் அதனதன் தனிப்பெயர்கொண்டே இளம்பூரணர் முதலியோர் எடுத்தாண்டுள்ளார்கள். களவியலுரையில் கடைச்சங்கவரலாறு கூறுமிடத்துப் பத்துப்பாட்டு என்பது குறிக்கப்படவில்லை. மலைபடுகடாத்தின் உரையில் (அடி-145) 'சங்கத்தார் நீக்காது கோத்தற்குக்காரணம்' என்று பொதுப்பட எழுதிச்செல்வது கோத்தார் இவரெனக் கூறவியலாமையையே புலப்படுத்துகிறது. எனவே சௌகரியங்கருதி ஒருமுறையில் எழுதிக்கோத்த நீண்ட பாடல்களைப் பிற்காலத்தார் 'பத்துப்பாட்டு' என வழங்கலாயினர் என்றலே அமைவுடைத்தெனத் தோன்றுகிறது. இவ்வழக்கு கி. பி. 13-ஆம் நூற்றாண்டிற்குமுன்னரே நிலைத்துவிட்டதென்பது 'மயிலைநாதர்' 'பத்துப்பாட்டு, பதினெண்கீழ்க்கணக்கு என்னும் இவ்விலக்கியங்களுள்ளும்' (நன்-387 உரை) எனக்கூறுவதால் விளங்கும். 'பாட்டு' எனக் குறிப்பிடும் வழக்காறும் நாளடைவில் உளதாயிற்றென்பது 'பாட்டினுந் தொகையினும் வருமாறு கண்டுகொள்க' எனப் பேராசிரியர் (தொல். செய். 50) கூறுவதால் அறியலாகும்.

மேலெழுதியவற்றாற் பெற்ற முடிபுகள் கீழேதொகுத்துக் காட்டப்பட்டுள்ளன:

| | | காலம் | நூல்கள் | சமயம் |
|---|---|---|---|---|
| 1. | சங்க-நக்கீரர் | கி. பி. 250 | நெடுநல்வாடை<br>தொகைநூற்செய்யுட்கள் | ? |
| 2. | முருகு-நக்கீரர் | கி. பி. 450 | முருகாற்றுப்படை | சைவம் |
| 3. | இலக்கண-நக்கீரர் | கி. பி. 650 | அடிநூல், களவியலுரை<br>நாலடி நானூறு | சமணம் |
| 4. | நக்கீரதேவநாயனார் | கி. பி. 850 | 11-ஆம் திருமுறைப் பிரபந்தங்கள் | சைவம் |

முருகாற்றுப்படைக்கு நச்சினார்க்கினியர் உரையைத்தவிரப் பல உரைகள் எழுதப்பட்டுள்ளன. பண்டையுரைகாரர்கள்மீது சுமத்தப்பட்ட உரைகளும் அச்சிலிருக்கின்றன. உதாரணமாக, தி. சண்முகம்பிள்ளையவர்களால் பார்த்திபவரு மேடாவியில், சென்னை ஜீவரக்ஷாமிர்த அச்சுக்கூடத்தில் 'பரிமேலழகருரை'யென ஒருரை பதிப்பிக்கப்பட்டது. இதனையே மகாமகோபாத்தியாய டாக்டர் உ. வே. சாமிநாதையரவர்கள் பத்துப்பாட்டின்3-ஆம் பதிப்பில் 'வேறுரை' என அடிக்குறிப்பிற் காட்டியிருக்கின்றார்கள். பரிமேலழகர் இவ்வுரையை இயற்றவில்லையென்னுங் கருத்தோடுதான் இதனை 'வேறுரை' என ஐயரவர்கள் குறித்துள்ளாரென நினைக்கிறேன். இதனைப்போன்றே இப்போது வெளியிடப்பெறுவது 'உரையாசிரியருரை' என ஏட்டுப்பிரதியில் எழுதப்பெற்றுளது. உரையாசிரியர் என்று சிறப்பித்துச் சொல்லப்படும் இளம்பூரணவடிகள் இவ்வுரையை இயற்றியவரல்லர் என்பது உரையின்நடையை நோக்கியஅளவிற் புலனும். ஆனல் ஏட்டுப்பிரதி 994-ஆம் ஆண்டு கார்த்திகைமாதம் 30-ஆம் தேதி எழுதப்பெற்றது. எனவே இற்றைக்கு 124 வருஷங்களுக்குமுன்பிரதிசெய்ததாகும். எப்பொழுது இவ்வுரை வகுக்கப்பெற்றது என்பது அறியக்கூடவில்லை. இவ்வுரையும் நச்சினார்க்கினியர் உரையும் பெரிதும் ஒத்துச்செல்கின்றன. 'வசிந்துவாங்கு நிமிர்தோள்' (106-ஆம் அடி) என்றதன் உரையில் 'வளையவேண்டுமிடம் வளைந்து நிமிரவேண்டுமிடம் நிமிரும்தோளென்றும் உரைப்பர்' என நச்சினார்க்கினியர் தமக்கு முற்பட்ட உரைகாரர் ஒருவரைக் குறிப்பிடுகின்றார். இப்போது வெளியிடும் இவ்வுரையில் இப்பொருளே காணப்படுகிறபடியால், இவ்வுரை நச்சினார்க்கினியர்க்கு முந்தியது எனக்கொள்ளுதல் அமையும். உத்தேசமாக கி. பி. 15-ஆம் நூற்றாண்டில் இவ்வுரை எழுதப்பெற்றதாகலாம்.

இஃது ஒரு சிறந்த பழையவுரையாகும். யாவரும் அறியக்கூடியபடி மிகவும் எளிமையானநடையில் எழுதப்பெற்றிருக்கிறது. மாட்டு முதலிய இலக்கணத்தால் அடிகளைச் சிதைத்து அலைத்துப் பொருள்பண்ணுதபடி சொற்கிடக்கைமுறையிலேயே பெரும்பாலும் பொருள்கொள்ளப்பட்டிருக்கிறது. ஆற்றுப்படையைக் கற்

போர்க்கு இது மிகவும் உதவியாக இருக்கும். இவ்வுரையால் இது காறும் கருகலாயிருந்த ஓர் அரிய தொடருக்கு இப்போது பொருள் விளங்குகிறது. 216-ஆம் அடியிலுள்ள 'தலைத்தந்து' என்பதற்கு 'முதற்கைகொடுத்து' என நச்சினார்க்கினியர் எழுதினர். புறநானூறு 24-ஆம் செய்யுளில் 'தலைக்கை தரூஉந்து' என்பதற்கு அதன் பழையவுரைகாரர் 'முதற்கைகொடுக்கும்' என்றெழுதினர். 73-ஆம் கலியுள் 'துணங்கையுட்டலைக்கொள்ள' என்பதற்குத் 'துணங்கைக் கூத்திடத்தே......தலைக்கை கொடுத்தற்றொழிலை..... கொள்கையினாலே' என நச்சினார்க்கினியர் விளக்கினர். ஆனால் தலைக்கைகொடுத்தல் அல்லது முதற்கைகொடுத்தல் என்பதன் பொருள் இதுகாறும் விளங்கியபாடில்லை. இவ்வுரைகாரர் 'அவர்கள் (மகளிர்கள்) களவறிந்து அவர்கட்கு இருப்பிடங்கொடுத்து' என்றெழுதுகின்றார். இவ்வுரை பழைய வழக்காற்றினையுணர்ந்து எழுதியதாகத் தோன்றுகிறது; பொருளும் விளங்குகின்றது.

இவ்வரியவுரைப்பிரதி திருநெல்வேலியில் ஒருநண்பரது வீட்டிலிருந்து சில ஆண்டுகட்குமுன்னர் எனக்குக் கிடைத்தது. சென்னை ஸர்வகலாசாலையில் தமிழ்த்துறையில் மாணவராயிருந்த திரு. G. சுப்பிரமணியபிள்ளை M.A. இவ்வுரையைப் பிரதிசெய்துதந்து அச்சிடுங்காலத்தும் ஒப்புநோக்கி உதவிபுரிந்தார்கள். இவர்கள் இப்பொழுது அண்ணாமலை ஸர்வகலாசாலையில் ஆசிரியராயுள்ளார்கள். இதன் சொற்றொடாகராதி முதலியவற்றை மிக்க சிரத்தையுடன் எழுதியுதவியவர் இப்பொழுது சென்னை ஸர்வகலாசாலையில் தமிழ்த்துறையில் மாணவராயிருக்கும் வித்வான் M. ஷண்முகம்பிள்ளை. இவ்விருவருக்கும் எனது நன்றியுரித்தாகின்றது.

இதனை அச்சியற்றுங்காலத்து மிக்க கவனத்துடன் அச்சுப்பிரதியை ஒப்பிட்டு ஆராய்ந்து வேண்டும் உதவிபுரிந்த எனது அரிய நண்பர் ஸ்ரீ T. K. இராமாநுஜ ஐயங்காரவர்களுக்கு நான் மிகவும் கடமைப்பட்டுள்ளேன். செந்தமிழ்ப்பிரசுரமாக இதனைப் பிரசுரித்த மதுரைத் தமிழ்ச்சங்கத்தார்க்கு எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

S. வையாபுரிப்பிள்ளை

சென்னை.

குறிப்பு:— முன்னுரையில் (பக். – XII) கூறிய 'அடிநூல்' நத்தத்தனார் இயற்றியதாக யாப்பருங்கலக்காரிகையுரைப்பதிப்பு ('அருகிக்கலி' – 42) தெரிவிக்கின்றது. அடிநூலைப் பின்பற்றியெழுந்த கலிவிருத்தநூலில் 'நக்-கீரனாரடிநூலுள்ளுங்கேட்பவே' எனக் காணுதலால், 'நத்தத்தனார்' என்பது பிழையாதல்வேண்டும்.

# திருமுருகாற்றுப்படை

உலக முவப்ப வலனேர்பு திரிதரு
பலர்புகழ் ஞாயிறு கடற்கண் டாஅங்கு
ஓவற விமைக்கும் சேண்விளங் கவிரொளி
உறுநர்த் தாங்கிய மதனுடை நோன்றாட்
செறுநர்த் தேய்த்த செல்லுறழ் தடக்கை
மறுவில் கற்பின் வாணுதல் கணவன்

---

## உரையாசிரியருரை

1. உலகம் உவப்ப வலன் நேர்பு திரிதரு - உலகத்திலுள்ள பல்லுயிர்களும் மகிழ மேருவை வலமாக, யாவர்க்கும் நேராகச் சுழலும்

2. பலர் புகழ் ஞாயிறு கடற் கண்டாஅங்கு - தனது ஒளியாற் காட்சியின் பயன்கொள்வார் பலரும் புகழும் ஞாயிற்றைக் கடலிடத்துக் கண்டாற் போல

கடலிற் பசுமையும் ஆதித்தன் திருமேனியும் போன்று மயிலிற் பசுமையும் பிள்ளையார் திருமேனியும் மனத்தாற் கருதுவோர்க்குப் புலப்பட்டலால் இவ்வண்ணம் உவமைகூறப்பட்டது.

3. ஓவற இமைக்கும் சேண் விளங்கு அவிர் ஒளி - ஞாயிற்றின் ஒளி போலப் போதுசெய்யாமல், எக்காலமும் ஒழிவற விளங்குவதாகி மனவாக்கையும் கடந்த தூரத்திலே விட்டுவிளங்காநின்ற ஒளியினையும்

இதற்கு, சோமசூரியாக்கினி யொளிசெல்லாமல் ஒழிவற இயல்பான ஒளியையுடைய தேவருலகத்திலே அகமும் புறமுமாகி விட்டு விளங்கா நின்ற ஒளியென்றுமாம்.

4. உறுநர்த் தாங்கிய மதனுடை நோன் தாள் - தன்னையடைவோரைத் தாங்கும் யான் எனது என்னுஞ் செருக்கைக் கெடுக்கும் வலிய தாளினையும்

5. செறுநர்த் தேய்த்த செல் உறழ் தடக்கை - தனது அருள்வழி நில்லாது மாறுபட்டோரை [1]அழித்த, இடியேறுபோன்ற பெரிய கையினையும் உடைய

6. மறு இல் கற்பின் வாணுதல் கணவன்-குற்றமில்லாத அ[ற]க்கற்பையுடைய இந்திரன்மகள் தெய்வயானையார் கணவன்

---

[பிரதிபேதம்] [1] அழித்து.

*

கார்கோள் முகந்த கமஞ்சூல் மாமழை
வாள்போழ் விசும்பின் வள்ளுறை சிதறித்
தலைப்பெயல் தலைஇய தண்ணறுங் கானத்து
இருள்படப் பொதுளிய பாரரை மராஅத்து
உருள்பூந் தண்டார் புரளும் மார்பினன்
மால்வரை நிவந்த சேணுயர் வெற்பிற்
கிண்கிணி கவைஇய வொண்செஞ் சீறடிக்
கணைக்கால் வாங்கிய நுசுப்பிற் பணைத்தோட்
கோபத் தன்ன தோயாப் பூந்துகிற்
பல்காசு நிரைத்த சில்கா ழல்குற்

---

**7.** கார்கோள் முகந்த கமஞ்சூல் மாமழை - கடலிலே நீர்முகந்ததனாலாகிய நிறைந்த சூலையுடைய கரிய மேகமானது

**8–9.** வாள் போழ் விசும்பின் வள் உறை சிதறித் தலைப்பெயல் தலைஇய தண் நறுங் கானத்து-சந்திராதித்தருடைய ஒளியை நீக்கி ஆகாசத்திலே வளவிய துளிகளைச் சிந்தி முதன்மழைபெய்து அம்மழைவிட்ட குளிர்ந்த மணமுடைய காட்டிடத்து

**10.** இருள்படப் பொதுளிய பராரை மராஅத்து - இருளுண்டாம்படி தழைநெருங்கிய பருத்த அரையையுடைய செங்கடம்பினது

**11.** உருள் பூந் தண் தார் புரளும் மார்பினன் - வட்டம்பொருந்திய பூவாற் செய்த குளிர்ந்த மாலை அசையும் மார்பினையுடையவன்

**12.** மால் வரை நிவந்த சேண் உயர் வெற்பில் - பெரிய மூங்கில்கள் உயர வளர்ந்த தூரவுயர்ந்த மலையிடத்து

**13.** கிண்கிணி கவைஇய ஒண் செஞ் சீறடி - சிறு சதங்கையைச் சூழக் கட்டின ஒள்ளிய சிவந்த சிறிய அடியினையும்

**14.** கணைக் கால் வாங்கிய நுசுப்பின் பணைத் தோள் - திரண்ட காலையும் [1]நடக்கத்தால் வளைந்த இடையையும் மூங்கில்போன்ற தோளையும்

**15.** கோபத்தன்ன தோயாப் பூந்துகில் - இந்திரகோபத்தையொத்த சிவப்பையுடைய சாயம்பிடியாத பூத்தொழில்களையுடைய தெய்வத்தன்மையான துகிலையும்

**16.** பல் காசு நிரைத்த சில்காழ் அல்குல் - பல மணிகளாற் கோத்த இரண்டுவடம் பொருந்திய காஞ்சியை யணிந்த அல்குலினையும்

---

[பி - ம்] [1] அடக்கத்தால்,

கைபுனைந் தியற்றாக் கவின்பெறு வனப்பின்
நாவலொடு பெயரிய பொலம்புனை யவிரிழைச்
சேணிகந்து விளங்கும் செயிர்தீர் மேனித்
துணையோ ராய்ந்த இணையீ ரோதிச்
செங்கால் வெட்சிச் சீறித ழிடையிடுபு
பைந்தாட் குவளைத் தூவிதழ் கிள்ளித்
தெய்வ வுத்தியொடு வலம்புரி வயின்வைத்துத்
திலகந் தைஇய தேங்கமழ் திருநுதல்
மகரப் பகுவாய் தாழ மண்ணுறுத்துத்
துவர முடித்த துகளறு முச்சிப்

---

17. கைபுனைந்து இயற்றாக் கவின்பெறு வனப்பின் - கையால் அலங்கரித்துப் பிறப்பியாத தெய்வத்தன்மையான அழகைத் தமக்கு இயல்பாகவே பெறுகின்ற அழகையும்

18. நாவலொடு பெயரிய பொலம்புனை அவிர் இழை-சாம்புநதமென்னும் பெயரைப்பெற்ற பொன்னாற் செய்யப்பட்ட விளங்காநின்ற பூணினையும்

19. சேண் இகந்து விளங்கும் செயிர்தீர் மேனி - தூரநிலத்தைக் கடந்து விளங்குங் குற்றமில்லாத வடிவையும்

20. துணையோர் ஆய்ந்த இணை ஈர் ஓதி - தோழியர் நன்றென்றாராய்ந்த கடையொத்த நெய்ப்புடைய மயிரிலே

21–22. செங்கால் வெட்சிச் சீறிதழ் இடையிடுபு பைந்தாட் குவளைத் தூ இதழ் கிள்ளி - சிவந்த தாளையுடைய வெட்சிப்பூவினது சிறிய இதழ்களின் நடுவே பசுத்த தண்டினையுடைய நெய்தற்குவளையினது தூய இதழைக் கிள்ளியிட்டு

23. தெய்வ உத்தியொடு வலம்புரி வயின்வைத்து - சீதேவிவடிவாகச் சமைத்த தலைக்கோலத்துடனே வலம்புரிச்சங்குவடிவான அணியையும் வைத்தற்குரிய இடங்களிலே தலைக்கோலமாக வைத்து

24. திலதம் தைஇய தேம் கமழ் திருநுதல் - திலதமணிந்த மணநாறுகின்ற அழகிய நெற்றியிலே

25. மகரப் பகுவாய் தாழ மண்ணுறுத்து - சுறாவினது பெரிய வாயினது வடிவாகச் செய்த பணியைத் தங்கும்வண்ணம் அலங்காரம்பெறச்செய்து

26. துவர முடித்த துகள் அறு முச்சி - செய்தொழில் முற்றுப்பெற முடித்த குற்றமற்ற கொண்டையிலே

பெருந்தண் சண்பகஞ் செரீஇக் கருந்தகட்டு
உளைப்பூ மருதி னொள்ளிண ரட்டிக்
கிளைக்கவின் றெழுதரு கீழ்நீர்ச் செவ்வரும்பு
இணைப்புறு பிணையல் வளைஇத் துணைத்தக
வண்காது நிறைந்த பிண்டி யொண்டளிர்
நுண்பூ ணாகந் திளைப்பத் திண்காழ்
நறுங்குற டுரிஞ்சிய பூங்கேழ்த் தேய்வை
தேங்கமழ் மருதிணர் கடுப்பக் கோங்கின்
குவிமுகி ழிளமுலைக் கொட்டி விரிமலர்
வேங்கை நுண்டா தப்பிக் காண்வர

---

27. பெருந் தண் சண்பகம் செரீஇ - பெரிய குளிர்ந்த சண்பகப்பூவைச் சொருகி

27–28. கருந் தகட்டு உளைப்பூ மருதின் ஒள் இணர் அட்டி - கரிய தகடு போன்ற இலைகளையுடைய உளைபோன்ற மருதம்பூவினது ஒள்ளிய கொத்துக்களைச் செண்பகப்பூவின் நடுவே யிட்டு

29. கிளைக் கவின்று எழுதரு கீழ்நீர்ச் செவ்வரும்பு - பலவான கிளையரும் பீன்று அழகுபெற்று மேலே தோன்றுகின்ற நீர்க்கீழ்ச் சிவந்த அரும்பினாலே

30. இணைப்பு உறு பிணையல் வளைஇ - கட்டுதலுற்ற மாலையைக் கொண்டையைச் சூழக் கட்டி

30–31. துணைத்தக வண்காது நிறைந்த பிண்டி ஒண் தளிர் - இணையொத்த வளவிய காதிலே நிறைந்த அசோகினது ஒள்ளிய தளிர்களை

32. நுண் பூண் ஆகம் திளைப்ப - நுண்ணிதான அணிகளையுடைய மார்பிலே செறியும்வண்ணம் அணிந்து

32-33. திண் காழ் நறுங் குறடு உரிஞ்சிய பூங்கேழ்த் தேய்வை - திண்ணிய வயிரத்தையுடைய சந்தனக்குறடு அரைத்த அழகிய நிறத்தையுடைய குழம்பை

34. தேம் கமழ் மருதிணர் கடுப்ப - மணம் நாறுகின்ற மருதினது பூங்கொத்தை அப்பினாற்போல

34-35. கோங்கின் குவிமுகிழ் இளமுலைக் கொட்டி - கோங்கினது குவிந்த அரும்புபோன்ற இளைய முலைகளிலே அப்பி

35–36. விரி மலர் வேங்கை நுண் தாது அப்பிக் காண்வர - விரிந்த மலரையுடைய வேங்கையினது நுண்ணிய பூந்தாதுகளையும் அச்சந்தனக் குழம்பின்மேலே அழுத்தி அழகு காட்சிவர

வெள்ளிற் குறுமுறி கிள்ளுபு தெறியாக்
கோழி யோங்கிய வென்றடு விறற்கொடி
வாழிய பெரிதென் றேத்திப் பலருடன்
சீர்திகழ் சிலம்பகஞ் சிலம்பப் பாடிச்
சூரர மகளி ராடுஞ் சோலை
மந்தியு மறியா மரம்பயில் அடுக்கத்துச்
சுரும்பு மூசாச் சுடர்ப்பூங் காந்தட்
பெருந்தண் கண்ணி மிலைந்த சென்னியன்
பார்முதிர் பனிக்கடல் கலங்க வுள்புக்குச்
சூர்முதல் தடிந்த சுடரிலை நெடுவேல்
உலறிய கதுப்பிற் பிறழ்பற் பேழ்வாய்ச்

---

37. வெள்ளிற் குறு முறி கிள்ளுபு தெறியா - விளாவினது இளந்தளிர்களைக் கிள்ளி யொருவர்மேலொருவர் தெறித்து

38. கோழி யோங்கிய வென்று அடு விறற் கொடி - கோழியை உயரக் கொண்டிருக்கிற வெற்றிப்பாட்டாற் கொன்றெடுத்த வீரக்கொடி

39. வாழிய பெரிது என்று ஏத்திப் பலருடன் - மிகவும் வாழ்வதாக என்று வாழ்த்திப் பல பெண்கள் கூட

40. சீர் திகழ் சிலம்பகம் சிலம்பப் பாடி - அழகு ஒளிபெற்ற மலையிடத்து ஆரவாரிக்கப் பாடி

41. சூர் அரமகளிர் ஆடுஞ் சோலை - கொடிய வஞ்சனைகள்வல்ல தெய்வமகளிர் விளையாடப்பட்ட சோலையினையுடைய

42. மந்தியும் அறியா மரம் பயில் அடுக்கத்து - ஆதித்தனையுங்காணாத மரம்நெருங்கின பக்கவரையிடத்து

43. சுரும்பு மூசாச் சுடர்ப் பூங் காந்தள் - வண்டுகள் மொய்யாத நெருப்பையொத்த காந்தட்பூவினது

44. பெருந் தண் கண்ணி மிலைந்த சென்னியன் - மிகவுங் குளிர்ந்த மாலையைச் சூடிய திருமுடியையுடையவன்

45. பார் முதிர் பனிக் கடல் கலங்க உள்புக்கு - பூமியைச்சூழ்ந்த குளிர்ந்தகடல் கலங்கும்வண்ணம் உள்ளேசென்று

46. சூர்முதல் தடிந்த சுடர் இலை நெடு வேல் - சூரபன்மாவாகிய தலைவனைக்கொன்ற எரிகின்ற இலைத்தொழிலையுடைய நெடிய வேலாலே

47. உலறிய கதுப்பிற் பிறழ் பற் பேழ் வாய்-காய்ந்த மயிரினையும் நிரையொவ்வாத பல்லையும் பெரிய வாயையும்

சுழல்விழிப் பசுங்கட் சூர்த்த நோக்கிற்
கழல்கட் கூகையொடு கடும்பாம்பு தூங்கப்
பெருமுலை யலைக்குங் காதிற் பிணர்மோட்டு
உருகெழு செலவி னஞ்சுவரு பேய்மகள்
குருதி யாடிய கூருகிர்க் கொடுவிரற்
கண்டொட் டுண்ட கழிமுடைக் கருந்தலை
ஒண்டொடித் தடக்கையி னேந்தி வெருவர
வென்றடு விறற்களம் பாடித் தோள்பெயரா
நிணந்தின் வாயோள் துணங்கை தூங்க
இருபே ருருவி னொருபே ரியாக்கை

---

48. சுழல் விழிப் பசுங் கண் சூர்த்த நோக்கின் - சுழன்ற விழியையும் பசுத்த கண்ணினையு முடைய கொடியவஞ்சனையாகிய பார்வையோடு

விழி - மிண்டை.

49. கழல் கண் கூகையொடு கடும் பாம்பு தூங்க - கழல்போன்ற கண்ணினையுடைய கோட்டானுடனே கடிய பாம்பு தூங்குதலால்

கண் - எண்ணுமாம் (?).

50. பெரு முலை யலைக்குங் காதிற் பிணர் மோட்டு - பெரிய முலைகளை யசைக்குங் காதினையும் சற்சரையும் பெருமையு முடைய

51. உரு கெழு செலவின் அஞ்சுவரு பேய்மகள் - வடிவைப்பொருந்தின நடையினாலே கண்டார்க்கு அச்சமுண்டாம் பெண்பேய்கள்

52. குருதி ஆடிய கூர் உகிர்க் கொடு விரல் - உதிரந்தோய்ந்த கூரிய உகிரினையுடைய கொடிய விரலாலே

53. கண் தொட்டு உண்ட கழி முடைக் கருந்தலை - கண்களைத் தோண்டியுண்ணப்பட்ட மிக்க நாற்றத்தையுடைய பெரிய தலையை

54. ஒண் தொடித் தடக்கையின் ஏந்தி வெருவர - ஒள்ளிய வளையும் பெருமையுமுடைய அங்கையிலேந்தி அச்சமுண்டாக

55. வென்று அடு விறற் களம் பாடித் தோள் பெயரா-வெற்றிப் பாட்டாற் கொன்ற வெற்றிக்களத்தைப் பாடித் தோளை அசைத்து

56. நிணம் தின் வாயோள் துணங்கை தூங்க - நிணந்தின்னப்பட்ட வாயையுடையளாகித் துணங்கைக்கூத்தை யாட

57. இரு பேர் உருவின் ஒரு பேர் யாக்கை - மக்கள்வடிவும் விலங்கு வடிவுமான இரண்டுபெரிய வடிவினையுடைய ஒன்றாயிருக்கிற பெரிய சூரனுடல்

அறுவேறு வகையி னஞ்சுவர மண்டி
அவுணர் நல்வல மடங்கக் கவிழிணர்
மாமுதல் தடிந்த மறுவில் கொற்றத்து
எய்யா நல்லிசைச் செவ்வேற் சேஎய்
சேவடி படரும் செம்ம லுள்ளமொடு
நலம்புரி கொள்கைப் புலம்புரிந் துறையும்
செலவுநீ நயந்தனை யாயிற் பலவுடன்
நன்னர் நெஞ்சத் தின்னசை வாய்ப்ப
இன்னே பெறுதிநீ முன்னிய வினையே

---

58. அறு வேறு வகையின் அஞ்சுவர மண்டி - வேறுவேறாக அறும்படி அதற்குப்பொருந்திய கூறுபாட்டாலே சூரன் அஞ்சும்வண்ணம் நெருங்கிச் சென்று

59. அவுணர் நல் வலம் அடங்க - அவுணரெல்லாருக்கும் நல்ல வெற்றி இல்லையாக

கவிழ் இணர் - கீழ்நோக்கின பூங்கொத்தையுடைய

60. மா முதல் தடிந்த - மாவடிவாகிய சூரபற்மாவென்னும் முதல்வனைக் கொன்ற

இந்த மாவை அவுணர்க்கு வரங்கொடுக்கும் தனிமாவென்று சொல்லுவார்கள்.

60–61. மறு இல் கொற்றத்து எய்யா நல்லிசைச் செவ் வேற் சேஎய் - குற்றமில்லாத வெற்றியையும் ஒருவராலும் அளந்தறியப்படாத நல்ல புகழையும் சிவந்த வேலினையும் உடைய முதிராவடிவையுமுடையவன்

62. சேவடி படருஞ் செம்மல் உள்ளமொடு - அவனது சிவந்த திருவடியிலே செல்லும் தலைமையான உள்ளமொடு

63. நலம் புரி கொள்கைப் புலம் புரிந்து உறையும்-நன்றான அறங்களைச் செய்யாநின்ற கோட்பாட்டினாலே அவன் விரும்பித்தங்குமிடத்துக்கு

64. செலவு நீ நயந்தனையாயின் - வழியை விரும்பினையாயில்

64–65. பலவுடன் நன்னர் நெஞ்சத்து இன் நசை வாய்ப்ப - நற்குணங்கள் பலவுமுடைய உன்மனத்தில் இனிய ஆசைப்படியே பேறாக

66. இன்னே பெறுதி நீ முன்னிய வினையே - இப்பொழுதே பெறுவை நீ கருதிய கருமம்

## திருப்பரங்குன்று.

செருப்புகன் றெடுத்த சேணுயர் நெடுங்கொடி
வரிப்புனை பந்தொடு பாவை தூங்கப்
பொருநர்த் தேய்த்த போரரு வாயில்
திருவீற் றிருந்த தீதுதீர் நியமத்து
மாடமலி மறுகிற் கூடற் குடவயின்
இருஞ்சேற் றகல்வயல் விரிந்துவா யவிழ்ந்த
முட்டாட் டாமரைத் துஞ்சி வைகறைக்
கட்கமழ் நெய்த லூதி யெற்படக்

---

### திருப்பரங்குன்று.

67. செருப் புகன்று எடுத்த சேண் உயர் நெடுங் கொடி - போரைக் கருதி யெடுக்கப்பட்ட தூரத்திலே ஓங்கிய நீண்டகொடியும்

68. வரிப் புனை பந்தொடு பாவை தூங்க - வரிந்து ஊசித்தொழிலாற் புனையப்பட்ட பந்தும் பாவையும் தூங்க

பகைவரை மகளிராக்கி அவர்கள் கொண்டு விளையாடுதற்குத் தூங்கியது.

69. பொருநர்த் தேய்த்த போர் அரு வாயில் - பொருவாரையழித்து விடுதலால் போர்த்தொழில் இல்லையான மதில்வாயிலையும்

70. திரு வீற்றிருந்த தீது தீர் நியமத்து - திருமகள் மற்றுமுள்ள இடங்களினின்று நீங்கிவந்திருந்த குற்றமற்ற அங்காடித்தெருவையும்

71. மாடம் மலி மறுகிற் கூடற் குடவயின் - மாடங்கள் நெருங்கிய மற்றுள்ள தெருக்களையுமுடைய மதுரைக்கு மேற்றிசையிடத்து

72. இருஞ் சேற்று அகல் வயல் விரிந்து வாய் அவிழ்ந்த - பெருமையையும் சேற்றையும் உடைய அகன்ற வயலிலே இதழ் முறுக்கு நெகிழ்ந்து தாது தோன்ற மலர்ந்த

73. முள் தாள் தாமரைத் துஞ்சி - முள்ளைத் தண்டிலேயுடைய தாமரைப்பூவிலே துயின்று

வைகறை - இருள்புலருங்காலை

இருள்புலருங்காலை யென்றது நாலாஞ்சாமம்.

74. கள் கமழ் நெய்தல் ஊதி - தேனாறுகின்ற நெய்தலின் பூவின் மதுவுண்டு

எற்பட - ஞாயிறு தோன்றும்பொழுது

கண்போல் மலர்ந்த காமர் சுனைமலர்
அஞ்சிறை வண்டின் அரிக்கண மொலிக்கும்
குன்றமர்ந் துறைதலு முரியன்; அதாஅன்று

### திருச்சேந்தூர்

வைந்நுதி பொருத வடுவாழ் வரிநுதல்
வாடா மாலை ஓடையொடு துயல்வரப்

---

75. கண்போல் மலர்ந்த காமர் சுனைமலர் - கண்ணைப்போல் மலர்ந்த அழகிய சுனைப்பூக்களிலே

76. அம் சிறை வண்டின் அரிக் கணம் ஒலிக்கும் - அழகிய சிறகை யுடைய வண்டினது அழகிய திரட்சி ஆரவாரிக்கும்

77. குன்று அமர்ந்து உறைதலும் உரியன் - திருப்பரங்குன்றிலே திருவுள்ளம்பொருந்தித் தங்குதலும் உரிய தன்மையன்;

அத்தன்மையாகச் சொல்லப்பட்ட ஒளியையும் (3) தாளையும் (4) கையையும் (5) உடையனாகித் தேவயானையார் கணவனாகி (6) மாலையசையும் மார்பனாகி (11) காந்தள்மாலையைச் சூடிய திருமுடியையுடையனாகி (44) நெடிய வேலாலே பெண்பேய் களித்துப் பாடியாடும்வண்ணம் (56) அசுரனைக் கொன்ற வெற்றியினையும் (60) புகழையும் சிவந்த வேலையும் உடைய முதிராவடிவையுடைய பிள்ளையார் (61) திருவடியிலே செல்லவேணு மென்கிற மனத்தோடு (62) நீ செய்த நல்லறத்தினாலே அவன் விரும்பித் தங்குமிடத்துக்கு (63) நீ வழியை விரும்பினையாகில் (64) உன்னுடைய ஆசைப்படியே (65) இப்பொழுதே பெறுவை நீ நினைத்த கருமம் (66). (இதற்கு அவன் உறையுமிடம்:) மதுரைக்கு மேற்குத் (71) திருப்பரங்குன்றிலே தங்குதலும் உரியதன்மையன் (77)

அதாஅன்று - அதுவன்றி,

### திருச்சேந்தூர்

78. வை நுதி பொருத வடு ஆழ் வரி நுதல் - கூரிய நுனித்தலையையுடைய துறட்டியாலே குத்தப்பட்ட தழும்பு ஆழ்ந்திருக்கிற புகரையுடைய மத்தகத்தே

79. வாடா மாலை ஓடையொடு துயல்வர - பொன்னரிமாலை பட்டத்தோடே அசைய

படுமணி யிரட்டும் மருங்கிற் கடுநடைக்
கூற்றத் தன்ன மாற்றரு மொய்ம்பிற்
கால்கிளர்ந் தன்ன வேழ மேல்கொண்டு
ஐவே றுருவிற் செய்வினை முற்றிய
முடியொடு விளங்கிய முரண்மிகு திருமணி
மின்னுற ழிமைப்பிற் சென்னிப் பொற்ப
நகைதாழ்பு துயல்வரூஉம் வகையமை பொலங்குழை
சேண்விளங் கியற்கை வாண்மதி கவைஇ
அகலா மீனின் அவிர்வன இமைப்பத்

---

80. படுமணி இரட்டும் மருங்கின் கடுநடை - பெருமையுடைய மணிகள் மாறியொலிக்கும் பக்கத்தையும் கடிய நடையையும் உடைய

பாடென்பது குறுகிநின்றது.

81. கூற்றத்தன்ன மாற்றரும் மொய்ம்பின் - கூற்றுவனையொத்த பிறரால் தடுத்தற்கரிய வலியினையும் உடைத்தாய்

82. கால் கிளர்ந்தன்ன வேழம் மேல் கொண்டு-செல்லுமிடத்துக் காற்றெழுந்தாலொத்த யானையின்மேல் ஏறி

83. ஐவேறு உருவின் செய்வினை முற்றிய - ஐந்துதொழிற்கூறாய வேறு பட்ட வடிவினையுமுடைத்தாய செய்யத்தக்க தொழில்கள் முடிவும்பெற்ற

84. முடியொடு விளங்கிய முரண் மிகு திருமணி - முடியோடுகூட் விளக்கத்தையுடைய நிறங்கள் வேறுபட்டு மிகுத்த அழகையுடைய பல இரத் தினங்களும்

85. மின் உறழ் இமைப்பிற் சென்னிப் பொற்ப - மின்னலொத்திருக்கிற விளக்கத்தினாலே திருமுடியிலே பொலிவுபெற

86. நகை தாழ்பு துயல்வரூஉம் வகையமை பொலங்குழை - மணி யொளி தங்கியசையும் தொழிற்கூறுபாடுநிறை பொன்னாற் செய்த மகரக் குழையானவை

87. சேண் விளங்கு இயற்கை வாள் மதி கவைஇ - உயர்ந்த தூரநிலத்தி லே விளங்கும் இயல்பினையுடைய ஒளியையுடைய திங்களைச் சூழ்ந்து

88. அகலா மீனின் அவிர்வன இமைப்ப - நீங்காத மீன்கள்போல ஒளியை விடுவனவாகி விளக்கஞ்செய்ய

தாவில் கொள்கைத் தந்தொழின் முடிமார்
மனனேர் பெழுதரு வாணிற முகனே
மாயிருண் ஞாலம் மறுவின்றி விளங்கப்
பல்கதிர் விரிந்தன் றொருமுகம், ஒருமுகம்
ஆர்வல ரேத்த அமர்ந்தினி தொழுகிக்
காதலி னுவந்து வரங்கொடுத் தன்றே, ஒருமுகம்
மந்திர விதியின் மரபுளி வழாஅ
அந்தணர் வேள்வியோர்க் கும்மே, ஒருமுகம்
எஞ்சிய பொருள்களை யேமுற நாடித்
திங்கள் போலத் திசைவிளக் கும்மே, ஒருமுகம்

---

89. தா இல் கொள்கைத் தம் தொழில் முடிமார் - கேடில்லாத வீரக் கோட்பாட்டையுடைத்தாகிய தவஞ்செய்தலை முடிப்பவருடைய

90. மனன் நேர்பு எழுதரு வாள் நிற முகனே - மனங்களிலே நேராகித் தோற்றுதலையுடைய ஒளியையும் நிறத்தையும் உடைய முகங்களிலே

91–92. மா இருள் ஞாலம் மறு இன்றி விளங்கப் பல்கதிர் விரிந்தன்று ஒருமுகம்-பெருமையையும் இருட்சியையும் உடைய உலகம் குற்றமின்றாய் விளங்கும்படி சோமசூரியாக்கினியிடத்திற் பலவாகிய கிரணங்களை விரித்தது ஒருமுகம்;

92–94. ஒருமுகம் ஆர்வலர் ஏத்த அமர்ந்து இனிது ஒழுகிக் காதலின் உவந்து வரம் கொடுத்தன்றே - ஒரு முகமானது தன்மேல் விருப்பமுடைய அடியார் துதிக்கத் திருவுள்ளம்பொருந்தி அவர்கட்கு இனிதாக நடந்து விருப்பத்துடனே மகிழ்ந்து வேண்டுகோள்களைக் கொடுத்தது;

94–96. ஒருமுகம் மந்திர விதியின் மரபுளி வழாஅ அந்தணர் வேள்வி ஓர்க்கும்மே - ஒருமுகமானது மந்திரங்களை விதிக்கப்பட்ட வேதத்தினது முறைமையாராய்ந்து அவ்வொழுக்கந் தப்பாத பிராமணருடைய யாகங்களைத் தீங்குவாராமல் ஆராயாநிற்கும்;

உள்ளி யென்றது நடுக்குறைந்தது.

96–98. ஒருமுகம் எஞ்சிய பொருள்களை ஏமுற நாடித் திங்கள்போலத் திசைவிளக்கும்மே - ஒருமுகமானது ஆய்ந்தறியப்படாமலொழிந்த ஆழ் பொருள்களைத் தெய்வவிருடிகள் இன்புறும்வண்ணம் ஆராய்ந்து சரற்கால சந்திரன்போல அத்திக்குக்களை விளக்காநிற்கும்;

செறுநர்த் தேய்த்துச் செல்சமம் முருக்கிக்
கறுவுகொ ணெஞ்சமொடு களம்வேட் டன்றே, ஒருமுகம்
குறவர் மடமகள் கொடிபோல் நுசுப்பின்
மடவரல் வள்ளியொடு நகையமர்ந் தன்றே; ஆங்கம்
மூவிரு முகனும் முறைநவின் றொழுகலின்
ஆரம் தாழ்ந்த அம்பகட்டு மார்பிற்
செம்பொறி வாங்கிய மொய்ம்பிற் சுடர்விடுபு
வண்புகழ் நிறைந்து வசிந்துவாங்கு நிமிர்தோள்

---

98–100. ஒருமுகம் செறுநர்த் தேய்த்துச் செல் சமம் முருக்கிக் கறுவு கொள் நெஞ்சமொடு களம் வேட்டன்றே - ஒரு முகமானது செறற்குரிய அசுரர் முதலோரை அழித்துத் திருவுள்ளத்திலே நடந்துபோதுகிற நடு நிலைமையைக் கெடுத்துக் கறுவுதல்கொண்ட மனத்தோடு போர்க்களத்தை விரும்பாநின்றது;

100–102. ஒருமுகம் குறவர் மடமகள் கொடிபோல் நுசுப்பின் மட வரல் வள்ளியொடு நகையமர்ந்தன்றே - ஒரு முகமானது மலைக்குறவருடைய பேதைமையுடைய மகளிரில் கொடியையொத்த இடையினையும் பேதைமை யுண்டாதலையுமுடைய வள்ளிநாய்ச்சியாருடனே மகிழ்ச்சிபொருந்திற்று;

102–103. ஆங்கு அம் மூவிரு முகனும் முறை நவின்று ஒழுகலின் - அவ் விடத்து அவ் வாறுமுகமும் அம்முறைமைகளைப் பயின்று நடத்தலால் அவ் வாறுமுகங்கட்கும் பொருந்தும்வண்ணம்

104. ஆரம் தாழ்ந்த அம் பகட்டு மார்பின் - பதக்கம் தங்கின அழகை யும் பெருமையையும் உடைய மார்பிடத்து

105. செம்பொறி வாங்கிய மொய்ம்பின் சுடர்விடுபு - சிவந்த மூன்று வரியாகிய உத்தம இலக்கணத்தை[யும்] தன்னோடெதிர்த்தார்கள் வலியை வாங்கப்பட்ட வலியையும் [உடைய], ஒளிவிட்டு

106. வண்புகழ் நிறைந்து - வளவிய புகழ் நிறையப்பட்டு; வசிந்து வாங்கு நிமிர் தோள்—திரண்டு வளையவேண்டுமிடம் வளைந்தும் நிமிரவேண்டு மிடம் நிமிர்ந்தும் உயர்ந்த தோள்களில்

பகைவரைப் பிளந்து அவருயிரை வாங்கும் உயர்ந்த தோள்களில் என்றுமாம்.

விண்செலன் மரபின் ஐயர்க் கேந்திய தொருகை
உக்கஞ் சேர்த்திய தொருகை
நலம்பெறுகலிங்கத்துக் குறங்கின்மிசையசைஇயதொருகை
அங்குசங் கடாவ வொருகை இருகை
ஐயிரு வட்டமொ டெஃகுவலந் திரிப்ப
ஒருகை மார்பொடு விளங்க

---

107. விண்செலல் மரபின் ஐயர்க்கு ஏந்தியது ஒருகை - ஆகாயத்தே இயங்கும் முறைமையுடைய தேவர்கட்குப் பாதுகாவலாக உயர்ந்தது ஒருகை;

108. உக்கம் சேர்த்தியது ஒருகை - மருங்கில்வைத்தது ஒருகை;

இக் கைகள் பலகதிரையும் விரித்த திருமுகத்திற்கேற்பக் கதிர்களையுடைய சோம சூரியாக்கினி முதலான தேவர்கட்கு அசுரரால் துன்பம் வாராமல் பாதுகாவலாக நின்றனவென்றறிக.

109. நலம்பெறு கலிங்கத்துக் குறங்கின்மிசை அசைஇயது ஒருகை - நன்மையைப் பெற்றிருக்கிற திருப்பரிவட்டத்தையுடைய துடையின்மேலே தங்கியது ஒருகை;

110. அங்குசம் கடாவ ஒருகை - ஆனைத்துறட்டியாலே யானையைச் செலுத்தாநிற்க ஒருகை;

ஆனைமேலேறுவார்க்கு ஒருகை துடையிலே தங்குதல் இயல்பாதலான் அத்தன்மையாக அறிந்துகொள்க; இக் கைகள் வரங்கொடுத்த திருமுகத்திற்கேற்ப ஆனையின்மேலே எழுந்தருளிவந்து வரங்கொடுத்து ஆனையைச் செலுத்தியவாறு கண்டுகொள்க.

110-111. இருகை ஐயிரு வட்டமொடு எஃகு வலம் திரிப்ப - இரண்டு கைகள் அழகையும் பெருமையையுமுடைய பரிசையுடனே வேலையும் வலமாகச் சுழற்ற

இக் கைகள் வேள்வியோர்க்கும் என்ற திருமுகத்திற்கேற்ப வேள்வியில் அசுரரால் தீங்குவாராமல் பாதுகாத்தன.

112. ஒருகை மார்பொடு விளங்க - உண்மையாகிய உரையிறந்த பொருளையுணர்த்திய மவுனமுத்திரையாயிருத்தலான் ஒருகை மார்போடு விளக்கஞ்செய்ய

ஒருகை தாரொடு பொலிய வொருகை
கீழ்வீழ் தொடியொடு மீமிசைக் கொட்ப வொருகை
பாடின் படுமணி யிரட்ட வொருகை
நீனிற விசும்பின் மலிதுளி பொழிய வொருகை
வானர மகளிர்க்கு வதுவை சூட்ட ஆங்கப்
பன்னிரு கையும் பாற்பட வியற்றி

---

**113.** ஒருகை தாரொடு பொலிய - ஒருகை மாலையோடுசேர்ந்து அழகு பெற

இக்கைகள் தெரியாத பொருள்களை ஆராய்ந்து விளக்கிநின்ற முகத்திற் கேற்ப முடிவாயிருக்கிற மவுனமுத்திரையைப் பொருந்தியவாறு கண்டு கொள்க.

**113–114.** ஒருகை கீழ்வீழ் தொடியொடு மீமிசைக் கொட்ப - [ஒருகை] பகைவருடலைக் கிழித்து விரும்பி அணியப்பட்ட வளையுடனே மே[ன்]மேலே படைக்கலமெறித[ல]ாற் சுழலாநிற்ப

**114–115.** ஒருகை பாடின் படுமணி இரட்ட - [ஒருகை] பெருமையும் இசையினிமையும் உடைய வீரமணியை முழக்க

இக்கைகள் போர்க்களம் விரும்பிய திருமுகத்துக் கேற்றவாறு கண்டு கொள்க.

**115–116.** ஒருகை நீல் நிற விசும்பின் மலிதுளி பொழிய - ஒருகையானது நீலநிறத்தையுடைய மேகத்தால் மிக்க மழையைப் பெய்ய

**116–117.** ஒருகை வான் அரமகளிர்க்கு வதுவை சூட்ட-ஒருகையானது தேவருலகத்தில் தேவமகளிராகிய தெய்வ[ய]ானையார்க்கு மண்மாலையைப் புனைய

இக்கைகள் வள்ளியொடு மகிழ்ச்சியைப் பொருந்தின திருமுகத்திற் கேற்பப் போகத்தின்பொருட்டு மழைபெய்வித்து மணமாலையும் சூட்டிய வாறு கண்டுகொள்க.

**117–118.** ஆங்கு அப் பன்னிருகையும் பாற்பட இயற்றி - அவ்விடங்களில் அத்தன்மையான பன்னிரண்டுகையும் திருமுகங்கட்கு ஏற்ற முறைமையிலே பொருந்தத் தொழிலைச்செய்து

அந்தரப் பல்லியங் கறங்கத் திண்காழ்
வயிரெழுந் திசைப்ப வால்வளை ஞரல
உரந்தலைக் கொண்ட உருமிடி முரசமொடு
பல்பொறி மஞ்ஞை வெல்கொடி யகவ
விசும்பா றாக விரைசெலன் முன்னி
உலகம் புகழ்ந்த வோங்குயர் விழுச்சீர்
அலைவாய்ச் சேறலும் நிலைஇய பண்பே; அதாஅன்று

---

**119.** அந்தரப் பல்லியம் கறங்க - ஆகாசத்துப் பலவாகிய தோற்கருவி ஒலிப்ப

**119-120.** திண் காழ் வயிர் எழுந்து இசைப்ப வால் வளை ஞரல - திண்ணிய வயிரத்தையுடைய கொம்பு மிக்கொலிப்ப வெள்ளிய சங்கு முழங்க

**121.** உரம் தலைக்கொண்ட உரும் இடி முரசமொடு - வலியைத் தன்னிடத்தே பொருந்தின உருமேற்றினது இடியையொத்த வீரமுரசுடனே

**122.** பல் பொறி மஞ்ஞை வெல் கொடி அகவ - பல பீலிகளையுடைய மயிலும் வெற்றிக்கொடியாகிய கோழியும் ஆலிக்க

**123.** விசும்பு ஆறாக விரைசெலல் முன்னி - ஆகாசமே வழியாக விரைந்த நடையினைக் கருதி

**124.** உலகம் புகழ்ந்த ஓங்கு உயர் விழுச் சீர் - உயர்ந்தோராலே புகழப்பட்ட மிகவும் உயர்ந்த சீரிய புகழையுடைய

**125.** அலைவாய்ச் சேறலும் நிலைஇய பண்பே - திருச்செந்தில் எழுந்தருளுதலும் நிலையுடைய குணம்;

நாமஞரலைவாயென்னும் திருப்பதியே இது.

இத்தன்மையான ஆனையின்மேலேறி (82) ஆறு திருமுகமும் (103) பன்னிரண்டு திருக்கைகளும் (118) அத்தொழில்களைச் செய்யத் துந்துபி கொம்பு சங்கு முரசு இவ்வொலியுடனே (121) மயிலும் கோழியும் ஆரவாரிக்க (122) ஆகாசம்வழியாக விரைந்தநடையைக் கருதி (123) நாமஞரலைவாய் என்னும் திருச்சேந்திலேற வெழுந்தருளுதலும் நிலையுடைய குணம் (125);

அதாஅன்று - அதுவன்றி,

## திருவாவினன்குடி

சீரை தைஇய உடுக்கையர் சீரொடு
வலம்புரி புரையும் வானரை முடியினர்
மாசற இமைக்கும் உருவினர் மானின்
உரிவை தைஇய ஊன்கெடும் மார்பின்
என்பெழுந் தியங்கு மியாக்கையர் நன்பகற்
பலவுடன் கழிந்த வுண்டியர் இகலொடு
செற்றம் நீக்கிய மனத்தின ரியாவையும்
கற்றோ ரறியா அறிவினர் கற்றோர்க்குத்

---

### திருவாவினன்குடி

**126.** சீரை தைஇய உடுக்கையர் - மரவுரியைச் சேர்த்துத் தைத்த உடையினையுடையர்

**126-127.** சீரொடு வலம்புரி புரையும் வால் நரை முடியினர் - அழகொடு வலம்புரிச் சங்கையொக்கும் வெள்ளிதாக நரைத்த முடியினையுடையர்

**128.** மாசு அற இமைக்கும் உருவினர் - அழுக்கற விளங்கும் வடிவை யுடையவர்

**128–129.** மானின் உரிவை தைஇய ஊன்கெடும் மார்பின் - மானின் தோல் தைவரப்பட்ட விரதப்பட்டினியால் தசை கெடுகின்ற மார்பின்

**130.** என்பு எழுந்து இயங்கும் யாக்கையர் - எலும்பு தோன்றப்பட்டு உலாவும் உடம்பினையுடையர்

**130–131.** நன் பகல் பல உடன்கழிந்த உண்டியர் - நன்றான பகற்பொழுது பலவும் சேரநீங்கிய உணவினையுடையர்

மாத வுபவாசமுடையர்.

**131–132.** இகலொடு செற்றம் நீக்கிய மனத்தினர் - மாறுபாட்டோடு நெடுங்காலம் நிற்கும் கோபத்தையும் போக்கிய மனத்தினையுடையவர்

**132–133.** யாவையும் கற்றோர் அறியா அறிவினர் - கற்கவேண்டுவன நூல்கள் யாவையும் கற்ற கல்வியுடையோரால் அறியப்படாத அறிவை யுடையவர்

தாம்வரம் பாகிய தலைமையர் காமமொடு
கடுஞ்சினங் கடிந்த காட்சியர் இடும்பை
யாவது மறியா வியல்பினர் மேவரத்
துனியில் காட்சி முனிவர் முற்புகப்
புகைமுகந் தன்ன மாசில் தூவுடை
முகைவா யவிழ்ந்த தகைசூ ழாகத்துச்
செவிநேர்பு வைத்த செய்வுறு திவவின்
நல்லியாழ் நவின்ற நயனுடை நெஞ்சின்

---

**133–134.** கற்றோர்க்குத் தாம் வரம்பாகிய தலைமையர் - பலநூல்களையும் கற்ற கல்வியுடையோர்க்கு மயக்கமறப் பிரிவுசெய்து அந்நூற்பொருள்களை அறுதியிட்டுணர்த்தலாற் கல்விக்குத் தாமே யெல்லையாயிருக்கிற தலைமையையுடையர்

**134–135.** காமமொடு கடுஞ்சினம் கடிந்த காட்சியர் - போகப்பொருளிச்சையுடனே கடிய சினத்தையும் போக்கின அறிவினையுடையர்

**135–136.** இடும்பை யாவதும் அறியா இயல்பினர் - மன வாக்குக் காயங்களால்வரும் துன்பங்கள் சிறிதும் அறியாத இயல்பினையுடையவர்

**136–137.** மேவரத் துனியில் காட்சி முனிவர் முற்புக - திருவுள்ளத்துக்குப் பொருத்தம்வர யாவரிடத்தும் வெறுப்பில்லாத அறிவையுடைய இத்தன்மையராகிய முனிவர் எல்லார்க்கும் முன்னே செல்ல, அதன்பின்னாக

**138.** புகை முகந்தன்ன மாசில் தூ உடை-புகையை அடைத்தாற்போன்ற மெல்லிய அழுக்கில்லாததாய ஆடையையும்

**139.** முகை வாய் அவிழ்ந்த தகைசூழ் ஆகத்து - நாளரும்பு கிண்கிணியாகக் கொண்ட மலரைக்கட்டிய மாலைசூழ்ந்த மார்பையும்

**140.** செவி நேர்பு வைத்த செய்வுறு திவவின் - செவியால் நேர்ந்து உறுப்புக்களை எல்லைகளிலேயிருத்திவைத்த தொழின்மிக்க இறுக்கிய வார்க்கட்டையும் உடைய

செவியால் நேர்ந்து என்றது சுருதியை உற்றறிந்து என்றவாறு.

**141.** நல்லியாழ் நவின்ற நயனுடைநெஞ்சின் - நல்ல யாழிலோசையிலே பயின்ற ஈரமுடை நெஞ்சையும்

மென்மொழி மேவலர் இன்னரம் புளர
நோயின் றியன்ற யாக்கையர் மாவின்
அவிர்தளிர் புரையும் மேனியர் அவிர்தொறும்
பொன்னுரை கடுக்கும் திதலையர் இன்னகைப்
பருமம் தாங்கிய பணிந்தேந் தல்குல்
மாசின் மகளிரொடு மறுவின்றி விளங்கக்
கடுவொ டொடுங்கிய தூம்புடை வாலெயிற்று
அழலென வுயிர்க்கும் அஞ்சுவரு கடுந்திறற்
பாம்புபடப் புடைக்கும் பல்வரிக் கொடுஞ்சிறைப்

---

142. மென் மொழி மேவலர் இன் நரம்பு உளர - மெல்லிய வார்த்தையையும் பொருந்திய கந்திருவர் இனிய யாழ்நரம்பை வாசிக்க, இவருடனே

143. நோயின்று இயன்ற யாக்கையர் - எக்காலமும் பிணியின்றி இயலப்பட்ட உடம்பினராய்

143–144. மாவின் அவிர் தளிர் புரையும் மேனியர் - மாவினது விளங்காநின்ற தளிரையொக்கும் நிறத்தையுடையராய்

144–145. அவிர்தொறும் பொன்னுரை கடுக்கும் திதலையர் - விளங்குந்தோறும் பொன்னுரை விளக்கத்தைப்போலும் சுணங்கையுடையராய்

145–146. இன் நகைப் பருமம் தாங்கிய பணிந்து ஏந்து அல்குல் - இனிய ஒளியினையுடைய பதிஞற்கோவை மேகலையாகிய அதனைத் தாங்கப்பட்ட தாழவேண்டுமிடம் தாழ்ந்தும், உயரவேண்டுமிடம் உயர்ந்துமிருக்கிற அல்குற்றடத்தையுடைய

147. மாசு இல் மகளிரொடு மறு இன்றி விளங்க - குற்றமில்லாத காந்திருவமகளிரோடு குற்றமற்று விளங்க, அதன்பின்

148. கடுவொடு ஒடுங்கிய தூம்புடை வால் எயிற்று - நஞ்சுடனே மறையப்பட்ட உள்ளே துளையையுடைய வெள்ளிய பல்லினையும்

149. அழல் என உயிர்க்கும் அஞ்சுவரு கடும் திறல் - நெருப்புப்போலே நெடுமூச்சாகப் படுவிக்கும் கண்டார்க்கு அச்சம்வரத்தக்க கடிய கோபத்தையும் உடைய

150. பாம்பு படப் புடைக்கும் பல்வரிக் கொடும் சிறை - பாம்பைப் படும்படியடிக்கும் பல வரியையுடைத்தாகிய வளைந்த சிறகையுமுடைய

புள்ளணி நீள்கொடிச் செல்வனும் வெள்ளேறு
வலவயின் உயரிய பலர்புகழ் திணிதோள்
உமையமர்ந்து விளங்கும் இமையா முக்கண்
மூவெயின் முருக்கிய முரண்மிகு செல்வனும்
நூற்றுப்பத் தடுக்கிய நாட்டத்து நூறுபல்
வேள்வி முற்றிய வென்றடு கொற்றத்து
ஈரிரண் டேந்திய மருப்பி னெழினடைத்
தாழ்பெருந் தடக்கை யுயர்த்த யானை
யெருத்த மேறிய திருக்கிளர் செல்வனும்

---

**151.** புள் அணி நீள் கொடிச் செல்வனும் - கருடனை அணிந்த நீண்ட கொடியையுடைய திருமாலும்

**151–152.** வெள் ஏறு வலவயின் உயரிய பலர் புகழ் திணி தோள் - வெள்ளையெருத்தை வெற்றிக்களத்தில் உயரக்கொண்டிருக்கிற பலராலும் புகழப்பட்ட திண்ணிதான தோள்களையும்

**153.** உமை அமர்ந்து விளங்கும் இமையா முக்கண் - இறைவிபொருந்தி விளங்கிய பக்கத்தையும் இமையாத மூன்றுகண்ணையும் உடைய

**154.** மூ எயில் முருக்கிய முரண்மிகு செல்வனும் - மூன்றுமதில்களை யுடைய ஊர்களை யொழிக்கப்பட்ட வலிமிக்க உருத்திரனும்

**155.** நூற்றுப்பத்து அடுக்கிய நாட்டத்து - நூறென்னும் இலக்கத்தைப் பத்தென்னும் இலக்கத்தோடேயேற்றிய ஆயிரங்கண்ணையும்

**155–156.** நூறு பல் வேள்வி முற்றிய வென்று அடு கொற்றத்து - நூறாகியெண்ணப்பட்ட பல யாகங்களையும் செய்துமுடித்த வெற்றியினால் பகைவரைக் கொன்ற வெற்றியினையும் [உடையனாய்]

**157.** ஈரிரண்டு ஏந்திய மருப்பின் எழில் நடை - நாலு ஏந்தப்பட்ட கொம்பினையும் அழகிய நடையையும்

**158.** தாழ் பெரும் தடக்கை உயர்த்த யானை - தாழ்ச்சியையும் பெருமையையும் அளவினையும் உடைய துதிக்கையையும் உடைத்தாய் உய[ர்த்துச் சொல்ல]ப்பட்ட யானையினது

**159.** எருத்தம் ஏறிய திருக் கிளர் செல்வனும் - புறக்கழுத்தில் ஏறியிருக்கப்பட்ட அழகுமிக்க தேவேந்திரனும

நாற்பெருந் தெய்வத்து நன்னகர் நிலைஇய
உலகங் காக்கும் ஒன்றுபுரி கொள்கைப்
பலர்புகழ் மூவருந் தலைவ ராக
ஏமுறு ஞாலந் தன்னுட் டோன்றித்
தாமரை பயந்த தாவி லூழி
நான்முக வொருவற் சுட்டிக் காண்வரப்
பகலிற் றோன்றும் இகலில் காட்சி
நால்வே றியற்கைப் பதினொரு மூவரொடு
ஒன்பதிற் றிரட்டி யுயர்நிலை பெறீஇயர்

---

160. நால் பெரும் தெய்வத்து நன்னகர் நிலைஇய - நாலாகிய பெருந் திசைகளையுடைய நன்றாகிய ஊர்கள் நிலைபெற்ற

161. உலகு அங்கு ஆக்கும் ஒன்றுபுரி கொள்கை - உலகத்தை அவ்விடத்துப் படைக்குந்தொழிலொன்றைவிரும்பிய கோட்பாடுடையராகி, இதனாலே

162. பலர் புகழ் மூவரும் தலைவர் ஆக - பலரும் புகழப்பட்ட இந்திரன் திருமால் உருத்திரன் என்னும் இம் மூன்றுபேரும் தலைமையராகவேண்டி

163. ஏமுறு ஞாலந்தன்னுள் தோன்றி - மயக்கமுறுகின்ற பூமியிலே பிள்ளையார்சாபத்தினாலே வந்து பிறந்து

164. தாமரை பயந்த தா இல் ஊழி - திருமால் உந்தித்தாமரையிலே யுண்டாகப்பட்ட இடையீடில்லாத ஊழிக்காலத்தையுடைய

165. நான்முக வொருவற் சுட்டிக் காண்வர - நாலுமுகத்தையுடைய வொருவனாகிய பிரமனைப் படைக்குந்தொழிலாலே நிறுத்தக்கருதிப் பிள்ளையாரைக் காணவரும்வண்ணம்

166. பகலில் தோன்றும் இகல் இல் காட்சி - ஒருபொருளின் உண்மையைப் பகுத்துக்காணுமிடத்து அறிவின்மயக்கத்தால் வேறுபடத்தோன்றுவதில்லாத அறிவினையும்

167. நால்வேறு இயற்கைப் பதினொரு மூவரொடு - ஆதித்தர் உருத்திரர் வசு மருத்துவர் இந்நால்வகையால் வேறுபட்ட இயல்பினையுடைய பதினொன்றாகிய மூவ(முப்பத்துமூவ)ரோடு

168. ஒன்பதிற்றிரட்டி உயர்நிலை பெறீஇயர் - பதினெண்கணங்களாகிய உயர்ந்த பதங்களைப் பெற்றிருப்பாராகியவர்கள்

மீன்பூத் தன்ன தோன்றலர் மீன்சேர்பு
வளிகிளர்ந் தன்ன செலவினர் வளியிடைத்
தீயெழுந் தன்ன திறலினர் தீப்பட
உருமிடித் தன்ன குரலினர் விழுமிய
உறுகுறை மருங்கிற்றம் பெறுமுறை கொண்மார்
அந்தரக் கொட்பினர் வந்துடன் காணத்
தாவில் கொள்கை மடந்தையொடு சின்னாள்
ஆவி னன்குடி யசைதலு முரியன்; அதாஅன்று

---

169. மீன் பூத்தன்ன தோன்றலர் - நெருக்கத்தான் மீன்பொலிவுபெற்றுத் தோன்றினாற்போன்ற தோற்றத்தையுடையராய்

169–170. மீன் சேர்பு வளி கிளர்ந்தன்ன செலவினர் - மீனைச்சேர்ந்து காற்றெழுந்தாலொத்த நடையினையுடையராய்

170–171. வளியிடைத் தீ எழுந்தன்ன திறலினர் - காற்றிடத்தே நெருப்புத் தோன்றினாற்போன்ற போர்வலியை வல்லராய்

171–172. தீப் பட உரும் இடித்தன்ன குரலினர் - நெருப்புண்டாக இடியேறு இடித்தாற்போன்ற குரலினையுடையராய்

172–173. விழுமிய உறு குறைமருங்கில் தம் பெறுமுறை கொண்மார் - சீரிய குறையுறலென்னப்பட்ட வேண்டுகோள்களைப் பிள்ளையாரது இரண்டு பக்கத்திலும் நின்று தாம் பெறுமுறைமையினாலே முடித்துக்கொள்வாராக

174. அந்தரக் கொட்பினர் வந்து உடன்காண - ஆகாசத்திலே சுழற்சியுடையராய்வந்து எல்லாரும் கூடிக் காண

175–176. தா இல் கொள்கை மடந்தையொடு சின்னாள் ஆவினன்குடி அசைதலும் உரியன் - இடையீடில்லாத அருட்கற்பினது கோட்பாட்டையுடைய தெய்வ[ய]ானையாருடனே சின்னாள் ஆவினன்குடி யென்னும் திருப்பதியிலே தங்குதலும் உரியன்;

இந்தத் திருப்பதிக்குச் சித்தன்வாழ்வென்றும் பெயர்.

முனிவர் முன்னேசெல்ல (137), அதன்பின் காந்திருவர் யாழ்வாசிக்க (142), இவர்களுடனே கந்திருவமகளிரும் கூடவிளங்க (147), அவ்வெல்லையில் திருமாலும் (151), உருத்திரனும் (154) இந்திரனும் (159) படைக்குந்தொழிலாலே தாம் தாம தலைமையராகவேண்டி (162) இதற்குப் பிரமனைத் தொழிலிலே நிறுத்தக்கருதிப் (165) பதினெண்கணங்களும் (168)

## திருவேரகம்

இருமூன் றெய்திய இயல்பினின் வழாஅது
இருவர்ச் சுட்டிய பல்வேறு தொல்குடி
அறுநான் கிரட்டி யிளமை நல்லியாண்டு
ஆறினிற் கழிப்பி அறநவில் கொள்கை
மூன்றுவகைக் குறித்த முத்தீச் செல்வத்
திருபிறப் பாளர் பொழுதறிந்து நுவல

---

தாமும் தோன்ற ஆகாயச் செலவினராய்த் (170) திறலினராய்க் (171) குரலினராய்த் (172) தமது வேண்டுகோளை யிருபக்கத்திலும் நின்று தாம் பெறுமுறைமையிலே முடித்துக்கொள்வாராக (173), ஆகாசத்திலே சுழற்சியையுடையாராகச் சேரக் கூடிவந்து காணத் (174) தெய்வ[ய]ானையாருடனே ஆவினன்குடியிலே தங்குதலும் உரியன் (176);

**அதாஅன்று - அதுவன்றி,**

## திருவேரகம்

177. இருமூன்று எய்திய இயல்பினின் வழாஅது - ஓதல் ஓதுவித்தல் வேட்டல் வேட்பித்தல் ஈதல் ஏற்றல் என்னும் ஆறுதொழிலையும் பொருந்திய முறைமையிற் றப்பாது

178. இருவர்ச் சுட்டிய பல்வேறு தொல் குடி - தாயார் தந்தையார் என இருவர் மரபுமு[ல]கம் நன்றென்று மதித்த கோத்திரங்கள் பலவாய் வேறுபட்ட பழைய குடியின்கட் பிறந்த

179. அறுநான்கு இரட்டி இளமை நல்லியாண்டு - ஆறாகிய இலக்கத்தை நாவிலேகூட்டி யேற்ற இருபத்துநாலதனை இரட்டிக்க நாற்பத்தெட்டு நல்ல இளமைப்பருவமாகிய காலத்தை •

180. ஆறினிற் கழிப்பி அறம் நவில் கொள்கை - வேதநெறியிலே பிரமசரியத்திலே கழித்து அதன்பின் மனையறத்தைப் பயின்ற கொள்கையராகி

181. மூன்றுவகைக் குறித்த முத்தீச் செல்வத்து - நாற்சதிரம் முச்சதிரம் வில்வடிவமாகிய மூன்றுவகையினைக் கருதியிட்ட குண்டத்தில் ஆகவநீயம் தெக்கணாக்கினி காருகபத்தியம் என்று பேர்பெற்ற மூன்றுதீயைப் பொருந்திய செல்வத்தையுடைய

182. இருபிறப்பாளர் பொழுது அறிந்து நுவல - பூணூற்சடங்குக்கு முன் ஒருபிறப்பும் பின் ஒருபிறப்பும் ஆகிய இருபிறப்பையுடைய அந்தணர் தம் ஓதத்தக்கபொழுதுகளை அறிந்து வேதங்களையோதுதற்கு

ஒன்பது கொண்ட மூன்றுபுரி நுண்ஞாண்
புலராக் காழகம் புலர வுடீஇ
உச்சிக் கூப்பிய கையினர் தற்புகழ்ந்து
ஆறெழுத் தடக்கிய அருமறைக் கேள்வி
நாவியன் மருங்கின் நவிலப் பாடி
விரையுறு நறுமல ரேந்திப் பெரிதுவந்து
ஏரகத் துறைதலு முரியன்; அதாஅன்று

---

183. ஒன்பது கொண்ட மூன்றுபுரி நுண்ஞாண் - ஒன்பது நூலைப் பொருந்திய மூன்றுபுரியாகிய நுண்ணிய பூணநூலையுடையராய்

184. புலராக் காழகம் புலர உடீஇ - நீராடுங்காற் றோய்க்கப்பட்ட சேலையை உலர உடுத்து

185. உச்சிக் கூப்பிய கையினர் - தலையிலே கூப்பிய கையையுடையராய்

185–186. தற்புகழ்ந்து ஆறெழுத்து அடக்கிய அருமறைக் கேள்வி - பிள்ளையாரைத் துதித்து, [1]ஆறெழுத்தாலுண்டான பிள்ளையார்மந்திரத்தை அடக்கிக்கொண்ட, அரிய மறைகளை ஆசாரியரிடத்தே கேட்ட கேள்விப் படியே

187. நாவியன் மருங்கின் நவிலப் பாடி-நாவான்து அகன்றபுடைகளிலே ப[டி]ய ஓதி

188. விரை உறும் நறு மலர் ஏந்தி - மணமிக்க நறுவிய பூக்களை யேந்தி வழிபட

188–189. பெரிது உவந்து ஏரகத்து உறைதலும் உரியன் - மிக மகிழ்ந்து ஏரகமென்னும் திருப்பதியிலே இருத்தலும் உரியன்;

இருபிறப்பையுடைய அந்தணர் (182) பூணூலுடையராய்ச் (183) சேலையைப் புலர உடுத்தித் (184) தலையிலே கூப்பிய கையையுடையராய் (185) வேதங்களையோதி (187) நறுமலரேந்தி (வழிபட) (188) ஏரகத்துறைதலும் உரியன் (189);

அதாஅன்று - அதுவன்றி,

---

[பி-ம்] [1] ஆறெழுத்தாலுண்டானவர்.

## குன்றுதோறாடல்

பைங்கொடி நறைக்கா யிடையிடுபு வேலன்
அம்பொதிப் புட்டில் விரைஇக் குளவியொடு
வெண்கூ தாளம் தொடுத்த கண்ணியன்
நறுஞ்சாந் தணிந்த கேழ்கிளர் மார்பிற்
கொடுந்தொழில் வல்விற் கொலைஇய கானவர்
நீடமை விளைந்த தேக்கட் டேறல்
குன்றகச் சிறுகுடிக் கிளையுடன் மகிழ்ந்து
தொண்டகச் சிறுபறைக் குரவை யயர
விரலுளர் பவிழ்ந்த வேறுபடு நறுங்காற்

---

## குன்றுதோறாடல்

190. பைங்கொடி நறைக்காய் இடையிடுபு வேலன் - பச்சிலைக்கொடியாலே சாதிக்காயை நடுநடுவேயிட்டு வெறியாட்டாளன்

191. அம் பொதிப் புட்டில் விரைஇக் குழவியொடு - அழகுபொதிந்த புட்டில்போன்ற தக்கோலக்காயும் காட்டுமல்லிகையுடனே கலந்து

192. வெண் கூதாளம் தொடுத்த கண்ணியன் - வெண்டாளியையும் தொடுத்துக் கட்டின நெற்றிமாலையை யுடையனாய்

193. நறும் சாந்து அணிந்த கேழ் கிளர் மார்பில் - நறிய சந்தனம் பூசப்பட்ட நிறம் விளங்கித்தோன்றப்பட்ட மார்பினையுடையனாய்

194. கொடும் தொழில் வல் வில் கொலைஇய கானவர் - கொடிய தொழிலையுடைய வலிய வில்லாலே கொலைத்தொழிலைச் செய்யப்பட்ட மலைக்குறவரும்

195. நீடு அமை விளைந்த தேக் கள் தேறல் - நீண்ட மூங்கிலிலே யிருந்து முற்றின தேனாற்செய்த கள்ளினது தெளிவை

196. குன்று அகச் சிறு குடிக் கிளையுடன் மகிழ்ந்து - மலையிடத்துச் சிற்றூரில் தம் சுற்றத்துடனே உண்டு மகிழ்ந்து

197. தொண்டகச் சிறு பறைக் குரவை அயர - குறிஞ்சிநிலத்துக்குரிய தொண்டகமென்னும் பெயரையுடைய சிறுபறையொலியுடனே ஒருவர்க்கொருவர் கைகோத்தாடலைச் செய்ய

198. விரல் உளர்பு அவிழ்ந்த வேறுபடு நறும் கால் - விரல்நுனியால் தடவ வாய் நெகிழ்ந்து வேறுபட்ட நறுவிய மணத்தினையுடைத்தாகி

குண்டுசுனைப் பூத்த வண்டுபடு கண்ணி
இணைத்த கோதை அணைத்த கூந்தல்
முடித்த குல்லை யிலையுடை நறும்பூச்
செங்கால் மராஅத்த வாலிண ரிடையிடுபு
சுரும்புணத் தொடுத்த பெருந்தண் மாத்தழை
திருந்துகா ழல்குற் றிளைப்ப வுடீஇ
மயில்கண் டன்ன மடநடை மகளிரொடு
செய்யன் சிவந்த வாடையன் செவ்வரைச்
செயலைத் தண்டளிர் துயல்வருங் காதினன்

---

199. குண்டு சுனைப் பூத்த வண்டு படு கண்ணி-ஆழ்ந்த சுனைகளிலே பூத்த வண்டு வீழ்கின்ற நெற்றிமாலையையும்

200. இணைத்த கோதை அணைத்த கூந்தல் - பலவாக இணைத்த மாலையுடனே சேர்த்த மயிரையும்

201. முடித்த குல்லை யிலையுடை நறும் பூ - மயிரின்மேலே முடிக்கப்பட்ட கஞ்சங்குல்லையினையும் இலைகளுடனே நறிய பூக்களையும்

துளபமெனினும் அமையும்;

202. செங்கால் மராஅத்த வால் இணர் இடையிடுபு - செவ்விய காலையுடைய கடம்பினிடத்துளவாகிய வெள்ளிய பூங்கொத்துக்களை நடுவே வைத்து

203. சுரும்பு உண்ணத் தொடுத்த பெரும் தண் மாத் தழை - வண்டுகள் தேனுண்ணும்படி தொடுத்த மிகவும் குளிர்ந்த பெரிய தழையை

204. திருந்து காழ் அல்குல் திளைப்ப உடீஇ - திருந்திய மணிவடமுடைய மேகலை பொருந்திய அல்குற்றடத்திலே பயில உடுத்து

205. மயில்கண்டன்ன மடநடை மகளிரொடு - சாயலுடைமையாலே மயிலைக் கண்டாற்போன்ற அறியாமைபொருந்திய ஒழுக்கத்தினையுடைய மகளிரோடு

குரவைக் கூத்தையாடவென முடிக்க. அவ்வெல்லையில்;

206. செய்யன் சிவந்த ஆடையன் செவ்வரை - சிவந்த திருமேனியுடையனாகிச் சிவந்த உடையினனாகிச் சிவந்த அரையினையுடையனாகி

207. செயலைத் தண் தளிர் துயல்வரும் காதினன் - அசோகினது குளிர்ந்த தளிர் பொருந்தி அசையப்பட்ட காதையுடையனாகி

கச்சினன் கழலினன் செச்சைக் கண்ணியன்
குழலன் கோட்டன் குறும்பல் லியத்தன்
தகரன் மஞ்ஞையன் புகரில் சேவலங்
கொடியன் நெடியன் தொடியணி தோளன்
நரம்பார்த் தன்ன இன்குரற் றொகுதியொடு
குறும்பொறிக் கொண்ட நறுந்தண் சாயன்
மருங்கிற் கட்டிய நிலனேர்பு துகிலினன்
முழவுறழ் தடக்கையின் இகல்வே லேந்தி
மென்றோட் பல்பிணை தழீஇத் தலைத்தந்து

---

208. கச்சினன் கழலினன் செச்சைக் கண்ணியன் - கட்டின கச்சையுடையனாகி வீரக்கழலையுடையனாகி வெட்சிமாலையையுடையனாகி

209. குழலன் கோட்டன் குறும் பல்லியத்தன் - குழலோசையுடையனாகிக் குறிக்கப்பட்ட கொம்பினையுடையனாகிச் சிறிதாகிய பலவான தோற்கருவி துளைக்கருவிகளுடைய ஓசைகளுடையனாகி

210. தகரன் மஞ்ஞையன் - வளர்கிடாயை யுடையனாகி மயில்வாகனத்தையுடையனாகி

210-211. புகர் இல் சேவலங்கொடியன் நெடியன் தொடியணி தோளன் - குற்றமில்லாத கோழியாகிய அழகிய கொடியையுடையனாகி நெடுகியிருப்பானாகி வளையணிந்த தோளையுடையனாகி

212. நரம்பு ஆர்த்தன்ன இன்குரல் தொழுதியொடு - நரம்பு ஆரவாரித்தாற்போன்ற இனியகுரல்களையுடைய கந்திருவமகளிர்கூட்டத்தோடு

213-214. குறும் பொறிக் கொண்ட நறும் தண் சாயல் மருங்கில் கட்டிய நிலன் நேர்பு துகிலினன் - நுண்ணிதாகிய எழுத்துத்தொழில் பொருந்திய நறிய குளிர்ந்த மென்மையுடையதாகிக் கச்சைகட்டிய மருங்குலிலே சிகசென வுடுத்த தொங்கல் நிலத்திலே பொருந்திய துகிலையுடையனாகி

215. முழவு உறழ் தடக் கையின் இகல் வேல் ஏந்தி - முழந்தாளைப் பொருந்திய கையிலே போர்வேலேந்தப்பட்டவன்

216. மென் தோள் பல்பிணை தழீஇத் தலைத்தந்து - மெல்லிய தோள்களையுடைய பலவாகிய மான்பிணைகள்போலும் மெய்தீண்டி விளையாடுதற்குரிய தெய்வமகளிரோடு தழுவிக்கொண்டு அவர்கள் களவறிந்து அவர்கட்கு இருப்பிடங்கொடுத்து

குன்றுதொ றாடலு நின்றதன் பண்பே; அதாஅன்று

திருச்சோலைமலை

சிறுதினை மலரொடு விரைஇ மறியறுத்து
வாரணக் கொடியொடு வயிற்பட நிறீஇ
ஊரூர் கொண்ட சீர்கெழு விழவினும்
ஆர்வல ரேத்த மேவரு நிலையினும்
வேலன் றைஇய வெறியயர் களனும்
காடும் காவும் கவின்பெறு துருத்தியும்

---

**217.** குன்றுதொறு ஆடலும நின்ற தன் பண்பே - மலைகடோறும் சென்று விளையாடுதலும் தனக்கு நிலைமைபெற்ற குணம்;

வெறியாட்டாளனும் (190) நெற்றிமாலையுடையனாகி (192) மலைக் குறவரும் (194) தம்சுற்றத்தோடு கள்ளுண்டு மகிழ்ந்து (196) தொண்டகமென்னும் பறையொலிக்கும் குரவைக்கூத்தை (197) மயிலகண்டன்ன மடநடைமகளிரோடும் (205) ஆட (197), அவ்வெல்லையில் சிவந்தமேனியும் சிவந்த ஆடையும் (206) முதலாகிய அங்கப்பிறத்தியங்களையுடையோனாகி வேலையேந்தப்பட்டவன் (215) தெய்வமகளிரோடு தழுவிக்கொண்டு (212) மலைகடோறும் சென்று விளையாடுதலும் நிலைபெற்றகுணம் (217)

அதாஅன்று - அதுவன்றி,

திருச்சோலைமலை

**218.** சிறுதினை மலரொடு விரைஇ மறி அறுத்து - சிறிய தினையரிசியைப் பூக்களோடேகலந்து இடப்பட்ட ஆட்டை அறுத்து

**219.** வாரணக் கொடியொடு வயிற்பட நிறீஇ - கோழிக்கொடியுடனே அவ்விடத்தில் தான் உண்டாகும்வண்ணம் நிறுத்தி

**220.** ஊர் ஊர் கொண்ட சீர்கெழு விழவினும் - ஊர்தோறும் ஊர்தோறும் எடுத்துக்கொண்ட சீர்மைபொருந்திய விழாவினிடத்தும்

**221.** ஆர்வலர் ஏத்த மேவரும் நிலையினும் - தன்மேலார்வமுடையார் துதிக்க அதற்குப் பொருந்துதல்வருகிற இடத்தினும்

**222.** வேலன் தைஇய வெறி அயர் களனும் - வெறியாட்டாளன் அலங்கரித்து வெறியாட்டைச்செய்யுமிடத்தும்

**223.** காடும் காவும் கவின்பெறு துருத்தியும் - காட்டிடத்தும் சோலையிடத்தும் அழகுபெறப்பட்ட ஆற்றிடைக்குறையினும்

யாறுங் குளனும் வேறுபல் வைப்பும்
சதுக்கமும் சந்தியும் புதுப்பூங் கடம்பும்
மன்றமும் பொதியிலும் கந்துடை நிலையினும்
மாண்டலைக் கொடியொடு மண்ணி யமைவர
நெய்யோ டையவி யப்பியை துரைத்துக்
குடந்தம் பட்டுக் கொழுமலர் சிதறி
முரண்கொ ளுருவின் இரண்டுட னுடீஇச்
செந்நூல் யாத்து வெண்பொரிச் சிதறி
மதவலி நிலைஇய மாத்தாட் கொழுவிடைக்

---

224. யாறும் குளனும் வேறு பல் வைப்பும் - ஆற்றங்கரையிலும் குளங் கரையினும் வேறுபட்டுப் பலவாகிய முற்கூறிய திருப்பதிகளையொழிந்த ஊர் களினும்

225. சதுக்கமும் சந்தியும் புதுப்பூங் கடம்பும் - நாற்சந்தியிலும் முச்சந்தி யிலும் ஐஞ்சந்திகளிலும் புதிய பூக்களையுடைய கடம்பின் அடியிலும்

226. மன்றமும் பொதியினும் கந்து உடை நிலையினும் - ஊர்நடுவாகி யெல்லாருமிருக்கும் மரத்தடியினும் அம்பலத்தினும் ஆதீண்டுகுற்றி முதலான தறிகள் நின்ற இடத்தினும்

227. மாண் தலைக் கொடியொடும் மண்ணி அமைவர - அழகையும் தலை மையையுமுடைய கோழிக்கொடியுடனே அலங்கரித்து நன்றாக நிறைவுவர

228 நெய்யோடு ஐயவி அப்பி ஐது உரைத்து - நெய்யுடனே சிறுகடு கைக் கலந்து பேய்கட்குப் பலிபிட்டு அழகிய மந்திரங்களை உச்சரித்து

229. குடந்தம்பட்டுக் கொழு மலர் சிதறி - வழிபட்டு நாண்மலர்களைத் தூவி

230. முரண்கொள் உருவின் இரண்டு உடன் உடீஇ - பகைத்தலைப் பொருந்திய நிறத்தையுடைய இரண்டாடையை உள்ளொன்றும் புறம் பொன்றுமாக உடுத்து

231. செம் நூல் யாத்து வெண்பொரிச் சிதறி - சிவந்த நூலாலே காப் புக்கட்டி வெள்ளிய பொரிகளைத் தூவி

232. மத வலி நிலைஇய மாத் தாட் கொழு விடை - தருக்குதலையும் வலியையும் நிலைபெற்ற பெரிய கால்களையும் உடைய கொழுவிய கிடாயினது

குருதி யொடு விரைஇய தூவெள் ளரிசி
சில்பலிச் செய்து பல்பிரப் பிரீஇச்
சிறுபசு மஞ்சளொடு நறுவிரை தெளித்துப்
பெருந்தண் கணவிர நறுந்தண் மாலை
துணையற வறுத்துத் தூங்க நாற்றி
நளிமலைச் சிலம்பின் நன்னகர் வாழ்த்தி
நறும்புகை யெடுத்துக் குறிஞ்சி பாடி
இமிழிசை யருவியோ டின்னியங் கறங்க
உருவப் பல்பூத் தூஉய் வெருவரக்
குருதிச் செந்தினை பரப்பிக் குறமகள்

---

233. குருதியொடு விரைஇய தூவெள் அரிசி - உதிரத்துடனே கலந்த தூய வெள்ளரிசியை

234. சில் பலிச் செய்து பல் பிரப்பு இரீஇ - சிறுபலியாக இட்டுப் பல தானியவித்துக்களையுடைய கொள்கலங்களையும் வைத்து

235. சிறு பசுமஞ்சளொடு நறுவிரை தெளித்து - அரைத்த சிறிய பசுமஞ்சளோடே நறிய சந்தனக்குழம்பைக் கலந்து தெளித்து

236. பெருந்தண் கணவிர நறும் தண் மாலை - மிகவும் குளிர்ந்த அலரிப்பூவாற்கட்டிய மணவிய குளிர்ந்த மாலைகளை

237. துணை அற அறுத்துத் தூங்க நாற்றி - தம்மில் ஒக்க அறும் வண்ணம் அறுத்து நாலும் வண்ணந் தூக்கி

238. நளி மலைச் சிலம்பின் நல் நகர் வாழ்த்தி - செறிந்து பக்கவரைகளையுடைய மலையினிடத்து நல்ல ஊர்களைப் பகை பிணி பசி நீங்குகவென வாழ்த்தி

239. நறும் புகையெடுத்துக் குறிஞ்சி பாடி - நறுவிய தூபம் கொடுத்து அந்நிலத்திற்குரிய குறிஞ்சிப்பண்ணைப் பாடி

240. இமிழ் இசை அருவியோடு இன்னியம் கறங்க - இம்மென்று இழியப்பட்ட ஓசையுடைய அருவியுடனே இனிய வாத்தியங்கள் முழங்க

241. உருவப் பல் பூத் தூஉய் வெருவர - நிறவிய பல பூக்களையும் தூவி அச்சம்வரும்வண்ணம்

242. குருதிச் செந்தினை பரப்பிக் குறமகள் - உதிரத்தோடே கலந்த சிவந்த தினையரிசியையும் பரப்புதல்செய்து குறச்சாதியில் மகள்

முருகியம் நிறுத்து முரணின ருட்க
முருகாற்றுப் படுத்த வுரு[கு]கெழு வியனகர்
ஆடுகளஞ் சிலம்பப் பாடிப் பலவுடன்
கோடுவாய் வைத்துக் கொடுமணி யியக்கி
ஓடாப் பூட்கைப் பிணிமுகம் வாழ்த்தி
வேண்டுநர் வேண்டியாங் கெய்தினர் வழிபட
ஆண்டாண் டுறைதலும் அறிந்த வாறே
ஆண்டாண் டாயினு மாக காண்டக
முந்துநீ கண்டுழி முகனமர்ந் தேத்திக்
கைதொழூஉப் பரவிக் காலுற வணங்கி

---

**243.** முருகு இயம் நிறுத்து முரணினர் உட்க - முருகனுக்கும் வாத்தியங்களை நின்று முழங்கப்பண்ணி மாறுபாடுடையார் அஞ்ச

**244.** முருகு ஆற்றுப்படுத்த உரு[கு]கெழு வியன் நகர் - பிள்ளையார் வரும்படி வழிபடுத்தின நெஞ்சுள் உருகுதல்பொருந்தின அகன்ற நகரின் கண்

**245.** ஆடு களம் சிலம்பப் பாடி - வெறியாடும இடம் ஆரவாரிக்கப் பிள்ளையாரைப் பாடி

**245–246.** பலவுடன் கோடு வாய்வைத்துக் கொடுமணி இயக்கி - கொம்புகள் பலவும் சேர ஊதி, கோடிய மணிகளையும் முழங்க அசைத்து

**247.** ஓடாப் பூட்கைப் பிணிமுகம் வாழ்த்தி - அஞ்சியோடாத மேற்கோளையுடைய மயிலை வாழ்த்தி

**248.** வேண்டுநர் வேண்டியாங்கு எய்தி வழிபட - வேண்டுவார்கள் வேண்டினாற்போலப் பெற்று வழிபட

**249.** ஆண்டாண்டு உறைதலும் அறிந்தவாறே - யான் முற்கூறிய விழவின் கண்ணும் காடும் காவும் முதலிய அவ்[வவ்]விடங்களிலே அவன் உறைதலும் யான் அறிந்தவழி

**250.** ஆண்டாண்டு ஆயினும் ஆக காண்டக - அவ்விடங்களிலுமாகப் பிற இடங்களிலுமாக உனது காட்சிக்குத் தக

**251.** முந்து நீ கண்டுழி முகன் அமர்ந்து ஏத்தி - முற்படக் கண்டவிடத்து முகமலர்ந்து துதித்து

**252.** கைதொழூஉப் பரவிக் கால் உற வணங்கி - கைகளாலே தலைமேலே கூப்பித் தொழுது வாழ்த்தித் திருவடியிலே தலையுறும்வண்ணம் தெண்டம்பண்ணி

நெடும்பெருஞ் சிமயத்து நீலப் பைஞ்சுனை
ஐவரு ளொருவ னங்கை யேற்ப
அறுவர் பயந்த வாறமர் செல்வ
ஆல்கெழு கடவுட் புதல்வ மால்வரை
மலைமகண் மகனே மாற்றோர் கூற்றே
வெற்றி வெல்போர்க் கொற்றவை சிறுவ
இழையணி சிறப்பிற் பழையோள் குழவி
வானோர் வணங்குவிற் றானைத் தலைவ
மாலை மார்ப நூலறி புலவ

---

253. நெடும் பெரும் சிமயதது நீலப் பைஞ்சுனை - மிகவும பெரிய இமவானுச்சியில் நீலநிறத்தையுடைய அழகிய சுனையிடத்து

254. ஐவருள் ஒருவன் அங்கை ஏற்ப - பிரமன் திருமால் உருத்திரன் மகேசுவரன் சதாசிவன் என்னப்பட்ட அஞ்சுபேரில் உருத்திரன் அக்கினி யிடமாகநின்று தனது அங்கையை யேற்க

255. அறுவர் பயந்த ஆறமர் செல்வ - இருடிகள் அக்கினியில் இட்ட கருப்பத்தை உருத்திரன்கையிலும் வாங்கிப் பொறுக்கலான அளவிலே அருந் ததி யொழிந்துநின்ற ஆறுமனைவியர் கையிலும் கொடுத்து அவர்கள் வாங்கிக் கொண்டு சூன்முதிர்ந்தபின் அவ்வறுவராலும் பெறப்பட்ட ஆறுவடிவைப் பொருந்திய செல்வனே,

256. ஆல்கெழு கடவுள் புதல்வ - கல்லாலின்கீழ்ப் பயின்றிருந்த கடவு ளினது புதல்வனே,

256–257. மால்வரை மலைமகள் மகனே மாற்றோர் கூற்றே - உயர்ந்த மூங்கில்கள் நெருங்கின இமையப்பருவதராசன்மகளாகிய பரமேசுவரி புத்திரனே, பகைவருக்குக் கூற்றுவனே,

258. வெற்றி வெல்போர்க் கொற்றவை சிறுவ - வெற்றிப்பாட்டானே வெல்போரைச்செய்யும் துற்கைசிறுவனே,

259. இழையணி சிறப்பிற் பழையோள் குழவி - பூணினது அழகினால் சிறப்பையுடைய காடுகிழாளுடைய மைந்தனே,

260. வானோர் வணங்கு வில் தானைத் தலைவ - வணங்கும் வானவர்க் கும் வில்லையுடைய சேனைக்கும் தலைவனே,

261. மாலை மார்ப நூல் அறி புலவ - மாலைசெறியும் மார்பனே, எல்லா நூல்களையும் அறியும் புலவனே,

செருவி லொருவ பொருவிறன் மள்ள
அந்தணர் வெறுக்கை அறிந்தோர் சொன்மலை
மங்கையர் கணவ மைந்த ரேறே
வேல்கெழு தடக்கைச் சால்பெருஞ் செல்வ
குன்றங் கொன்ற குன்றாக் கொற்றத்து
விண்பொரு நெடுவரைக் குறிஞ்சிக் கிழவ
பலர்புகழ் நன்மொழிப் புலவ ரேறே
அரும்பெறன் மரபிற் பெரும்பெயர் முருக
நசையுநர்க் கார்த்தும் இசைபெய ராள
அலந்தோர்க் களிக்கும் பொலம்பூட் சேஎய்
மண்டமர் கடந்தநின் வென்றா டகலத்துப்

---

262. செருவில் ஒருவ பொரு விறல் மள்ள - போர்த்தொழிலில் ஒப்பில்லாதானே, பொருகின்ற வெற்றியையுடைய வீரனே,

263. அந்தணர் வெறுக்கை அறிந்தோர் சொல்மலை - அந்தணர்களுடைய செல்வமாயிருப்பாய், அறிந்தோர்கள்வாக்குக்குச் சொன்மலையாயிருப்பாய்,

264. மங்கையர் கணவ மைந்தர் ஏறே - தேவயானையார்க்கும் வள்ளி நாய்ச்சியார்க்கும் கணவனே, வலியோர்க்கு இடபமே,

265. வேல் கெழு தடக்கைச் சால் பெருஞ் செல்வ - வேல்பொருந்திய பெரிய கையாலுண்டான மிகவும் பெரிய வெற்றிச்செல்வனே,

266. குன்றம் கொன்ற குன்றாக் கொற்றத்து-அசுரன் ஒதுங்கின கிரவுஞ்ச கிரியென்னும் மலையைப் பிளந்த குறைவுபடாத வெற்றியையுடையவனே,

267. விண் பொரும் நெடு வரைக் குறிஞ்சிக் கிழவ - தேவருலகத்தை யொக்க வளர்ந்த மலைகளையுடைய குறிஞ்சிநிலத்துக்கு உரியவனே,

268. பலர் புகழ் நன்மொழிப் புலவர் ஏறே - பலராலும் புகழப்பட்ட நல்லசொற்களையுடைய கவிப்புலவோர்க்குச் சிங்கத்தின் முதன்மையுடையாய்,

269. அரும் பெறல் மரபின் பெரும் பெயர் முருக - பெறுதற்கரிய முறைமையினையுடைய பெரும்பொருளாகிய வீட்டினையுடைய முருகனே,

270. நசையுநர்க்கு ஆர்த்தும் இசை பெயராள - வீட்டின்பத்தை விரும்பினோர்க்கு அதனை நுகர்விக்கும் பெரிய புகழையுடையாய்,

271–272. அலந்தோர்க்கு அளிக்கும் பொலம் பூட் சேய் மண்டு அமர் கடந்த நின் வென்று ஆடு அகலத்து - துன்பமுற்றோர்க்கு அருள்செய்வானாய்ப் பொன்னாற்செய்த பேரணிகலங்களை நெருங்கிய போர்களை முடித்த நின் மிகுந்த வெற்றியையுடைய மார்பிலே அணியப்பட்ட சேயே,

பரிசிலர்த் தாங்கும் உருகெழு நெடுவேஎள்
பெரியோ ரேத்தும் பெரும்பே ரியவுள்
சூர்மருங் கறுத்த மொய்ம்பின் மதவலி
போர்மிகு பொருந குரிசி லெனப்பல
யானறி யளவையின் ஏத்தி யானாது
நின்னளந் தறிதல் மன்னுயிர்க் கருமையின்
நின்னடி யுள்ளி வந்தனென் நின்னொடு
புரையுந ரில்லாப் புலமை யோயெனக்
குறித்தது மொழியா அளவையிற் குறித்துடன்
வேறுபல் லுருவிற் குறும்பற் கூளியர்

---

**273.** பரிசிலர்த் தாங்கும் உருகு எழு நெடுவேள் - இரந்துவந்தோரை வேண்டியதுகொடுத்துப் பாதுகாக்கும் கண்டார்க்கு உருகுதல் தோன்றப் பட்ட பெரியவனே,

**274.** பெரியோர் ஏத்தும் பெரும் பேர் இயவுள் - தேவர் முனிவர் துதிக் கப்பட்ட பெரிய திருநாமத்தையுடைய புகழாளனே,

**275.** சூர் மருங்கு அறுத்த மொய்ம்பின் மத வலி - சூரன்கிளையை வே ரறுத்த தோளிடத்து மிக்க வலியாலே

**276.** போர்மிகு பொருந குரிசில் எனப் பல - மிக்க போரிடங்களில் உவமித்தற்கானவனே, தலைவனே, என்று பலவாக

**277.** யான் அறி அளவையின் ஏத்தி ஆனாது - யானறிந்து நினக்குக் கூறிய அளவினால் நீயும் ஒழியாது ஏத்தி

**278.** நின் அளந்து அறிதல் மன் உயிர்க்கு அருமையின் - நின்னை அள விட்டு அறிகிறது மிக்க உயிர்கட்கு அரிதாகையால்

**279–280.** நின் அடி உள்ளிவந்தனன்; நின்னொடு புரையுநர் இல்லாப் புலமையோய், என - நின் திருவடியைப் பெறவேணுமென்று கருதிவந்தேன்; நின்னோடு உவமிப்பாரில்லாத மெய்ஞ்ஞானத்தையுடையாய், என்று

**281.** குறித்தது மொழியா அளவையில் - நீ கருதியதுதன்னைச் சொல்லுவதன்முன்னே

**281–282.** குறித்து உடன் வேறு பல் உருவில் குறும் பல் கூளியர் - உடனே அறிந்து வேறுபட்ட பல வடிவினையும் சிறிய பல்லையும் உடையராய்ப் பிள்ளையாரைச் சேவித்துநிற்பார்

சாறயர் களத்து வீறுபெறத் தோன்றி
அளியன் றானே முதுவா யிரவலன்
வந்தோன் பெருமநின் வண்புகழ் நயந்தென
இனியவும் நல்லவும் நனிபல வேத்தித்
தெய்வஞ் சான்ற திறல்விளங் குருவின்
வான்றோய் நிவப்பிற் றான்வந் தெய்தி
அணங்குசா லுயர்நிலை தழீஇப் பண்டைத்தன்
மணங்கமழ் தெய்வத் திளநலங் காட்டி

---

283. சாறு அயர் களத்து வீறு பெறத் தோன்றி - விழவுசெய்யப்பட்ட களத்திலே தனிப்பெறத் தோன்றி

284. அளியன்தானே முதுவாய் இரவலன் - அருள்செய்யத்தக்கான்றாய் அறிவுமுதிர்ந்த வாயையுடையனாகிப் பரிசில்பெறத் தக்கான்

285. வந்தோன் பெரும நின் வண் புகழ் நயந்து - வந்தான் பெருமானே நின் வளவிய புகழைக் கேட்டு விரும்பி

286. இனியவும் நல்லவும் நனி பல ஏத்தி என - கேட்டோர்க்கு இனியனவும் உறுதிபயப்பனவும் ஆகிய மிக்கவும் பலவற்றை வாழ்த்தியென்று கூற, அவ்வெல்லையில்

287. தெய்வம் சான்ற திறல் விளங்கு உருவின் - தெய்வத்தன்மை அமைந்த வலிவிளங்கும் வடிவினையும்

288. வான் தோய் நிவப்பில் தான் வந்து எய்தி - வானைத் தீண்டும் உயர்ச்சியையுமுடைய தான் வந்து குறுகி

289. அணங்கு சால் உயர் நிலை தழீஇ - அத் தெய்வத்தன்மையமைந்த உயர்ந்தநிலைமையை உள்ளடக்கி

289–290. பண்டைத் தன் மணம் கமழ் தெய்வத்து இள நலம் காட்டி - தனது முன்புண்டாகிய மணநாறுகின்ற தெய்வத்தன்மையையுடைய இளைய அழகைப் புலப்படுத்தி

அஞ்ச லோம்புமதி யறிவம்நின் வரவென
அன்புடன் நன்மொழி யளைஇ விளிவின்று
இருணிற முந்நீர் வளைஇய வுலகத்து
ஒருநீ யாகத் தோன்றி விழுமிய
பெறலரும் பரிசில் நல்குமதி பலவுடன்
வேறுபஃ றுகிலின் நுடங்கி யகில்சுமந்து
ஆர முழுமுதல் உருட்டி வேரற்
பூவுடை யிலங்குசினை புலம்பவேர் கீண்டு
விண்பொரு நெடுவரைப் பரிதியிற் றொடுத்த

---

291. அஞ்சல் ஓம்புமதி அறிவம் நின் வரவென - உனது அஞ்சுதலைப் பரிகரி, நின்னுடைய வரவு யாம் அறிந்தோமென்று

292. அன்புடன் நன்மொழி அளைஇ - அன்புடனே நல்ல வார்த்தைகளைக் கலந்தருளிச்செய்து

292–293. விளிவின்று இருள் நிற முந்நீர் வளைஇய உலகத்து - அழிவின்றி யிருண்ட நிறத்தையுடைய கடல்சூழ்ந்த உலகத்தில்

294–295. ஒரு நீயாகத் தோன்றி விழுமிய பெறலரும் பரிசில் நல்கும் - நீ ஒப்பில்லாதவனும்வண்ணம் வெளிப்பட்டுச் சீரிய பெறுதற்கரிய வீட்டின்பத்தைத் தருவன்

295–296. பலவுடன் வேறு பல் துகிலின் நுடங்கி - பலவாய்ச் சேர்ந்து வேறுபட்டிருக்கிற கொடிகள்போல் அசைந்து

296–297. அகில் சுமந்து ஆர முழு முதல் உருட்டி - அகில்மரத்தை மேல்கொண்டு சந்தன முழுமரத்தைத் தள்ளி

297–298. வேரல் பூவுடை யிலங்கு சினை புலம்ப வேர் கீண்டு - மூங்கில்களும் பூக்களையுடைய விளங்காநின்ற மரக்கோடுகளும் நடுங்க வேரைப் பிளந்து

299. விண் பொரு நெடு வரைப் பருதியின் தொடுத்த - தேவருலகத்தைத் தீண்டப்பட்ட நெடிய மலையிடத்து ஆதித்தமண்டலம்போலத் தொடுத்து வைக்கப்பட்ட

தண்கம ழலரிறால் சிதைய நன்பல
வாசனை முதுசுளை கலாவ மீமிசை
நாக நறுமலர் உதிர வூகமொடு
மாமுக முசுக்கலை பனிப்பப் பூநுதல்
இரும்பிடி குளிர்ப்ப வீசிப் பெருங்களிற்று
முத்துடை வான்கோடு தழீஇத் தத்துற்று
நன்பொன் மணிநிறங் கிளரப்பொன் கொழியா
வாழை முழுமுதல் துமியத் தாழை
இளநீர் விழுக்குலை உதிரத் தாக்கிக்

---

**300.** தண்கமழ் அலர் இறால் சிதைய - குளிர்ந்து மணக்கின்ற விரிந்த பெருந் தேன்கூடு கெட

**300–301.** நன் பல வாசனை முது சுளை கலாவ - நல்ல பலாவினது வாசனைகளையுடைய முற்றிய சுளைகள் விரவ

**301–302.** மீமிசை நாக நறுமலர் உதிர - மிகவும் உயர்ந்த சுரபுன்னையினது நறுமலர்கள் உதிர

**302–303.** ஊகமொடு மாமுக முசுக்கலை பனிப்ப - கருங்குரங்கோடே கரிய முகத்தையுடைய ஆண்முசுக்களும் நடுங்க

**303–304.** பூ நுதல் இரும்பிடி குளிர்ப்ப வீசி - புகரழகையுடைத்தாகிய மத்தகத்தையுடைய பெரிய பிடியானை குளிரும்வண்ணம் மோதி

**304–305.** பெருங் களிற்று முத்துடை வான் கோடு தழீஇத் தத்துற்று- பெரிய களிற்றுயானையினது முத்துடைய பெரிய கொம்புகளை உள்ளடக்கிக் குதித்தலைப்பொருந்தி

**306.** நன் பொன் மணி நிறம் கிளரப் பொன் கொழியா - விளைபொன்னும் நிறத்தையுடைய மணிகளும் மேற்றோன்றப் பொடிப்பொன்னைக் கொழித்து

**307–308.** வாழை முழுமுதல் துமியத் தாழை இளநீர் விழுக்குலை உதிரத் தாக்கி - வாழையினது பெரிய முதல் துணியவும் தெங்கிளநீரையுடைய சீரிய குலைகள் உதிரவும் எற்றி

கறிக்கொடிக் கருந்துணர் சாயப் பொறிப்புற
மடநடை மஞ்ஞை பலவுடன் வெரீஇக்
கோழி வயப்பெடை இரியக் கேழலொடு
இரும்பனை வெளிற்றின் புன்சா யன்ன
குரூஉமயிர் யாக்கைக் குடாவடி யுளியம்
பெருங்கல் விடரளைச் செறியக் கருங்கோட்டு
ஆமா நல்லேறு சிலைப்பச் சேணின்று
இழுமென இழிதரும் அருவிப்
பழமுதிர் சோலை மலைகிழ வோனே.

---

309. *கறிக்கொடிக் கருந்துணர் சாய* - மிளகுகொடிகளினது கரிய கொத்துக்கள் சாய்ந்துபோக

309–310. *பொறிப் புற மட நடை மஞ்ஞை பல உடன் வெரீஇ* - பீலியுடைய புறம்பையும் மடப்பம் பொருந்திய ஒழுக்கத்தையும் உடைய மயில்கள் பலவும் சேர வெருவி

311. *கோழி வயப்பெடை இரிய* - காட்டுக் கோழிகளுடைய வலிய பெடைகள் இரிய

311–313. *கேழலொடு இரும் பனை வெளிற்றின் புன் சாய் அன்ன குரூஉ மயிர்யாக்கைக் குடாவடி உளியம்* - காட்டுப்பன்றியோடு வெளிற்றினையுடைய பெரிய பனையினது புல்லிய செறும்பைப் போன்ற கரிய மயிரினையுடைய உடம்பினையும் வளைந்த அடியையுமுடைய கரடி

314. *பெரும் கல் விடர் அளைச் செறிய* - பெரிய கல்லு நீங்கிய முழையிலே சேர

314–315. *கருங் கோட்டு ஆமா நல் ஏறு சிலைப்ப* - கரிய கொம்பினையுடைய காட்டாவினது நல்ல ஏறுகள் முழங்க

315–316. *சேண் நின்று இழுமென இழிதரும் அருவி* - தூரமாகிய மலையினுச்சியினின்று இழுமென்னும் ஓசையுடனே விழும் அருவியையுடைத்தாய்

317. *பழம் உதிர் சோலை மலை கிழவோனே* - நற்கனிகள் உதிரப்பட்ட சோலைகளையும் உடைய மலைக்கு உரிமையுடையோன்

